உலக அழிவென்னும் மாயையை – இயற்கையோ இறைவனோ உருவாக்கவில்லை அறிவிலா மாந்தரே அலட்டுகின்றார் – முட்டாள்கள் மட்டுமே உலக அழிவை நம்புகின்றார்கள்– நீங்கள்?

கார்த்திகை மாதம் 31ம் திகதி

December 16, 2012

# மலைமுரசு®

MALAIMURASU

அறைவு 01 இயம் 21

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 பக்கங்கள் – 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

உயர் தேசிய திப்புளோமா பட்டதாரிகளை

# அரச நியமனத்திற் கருத்திற்கொள்ள முடியாது

06ம் பக்கத்தில் இக் கல்வி முறை பற்றிய விபரம் அடக்கப்பட்டுள்ளது

## கிழக்கு மாகாண ஆளுநர் திட்டவட்டமாக அறிவிப்பு

கிழக்கு மாகாணத்தின் கீழ் வழங்கப்படவுள்ள அரச நிரந்தர நியமனங்களில் கணக்கியலில் உயர் தேசிய திப்புளோமாப் பாடநெறிகளை கற்றுத் தேர்ந்தவர்களை உள்ளடக்க முடியாது என கிழக்கின் ஆளுநர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 12.12.12 அன்று கிழக்கு மாகாண ஆளுநருக்கும் உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் சங்கத்திற்கும் இடையிலான உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகளுக்கான அரச நியமனம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாக உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகள் சங்க செயலாளர் மலைமுரசுக்கு தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் சங்கத்தினரிடம் கிழக்கு மாகாண அரச நியமனங்களுக்கான விண்ணப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், உயர் தொழில் நுட்ப நிறுவனம் (Advanced Technological Institute) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் இல்லை எனவும் அதனால் அந் நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்கள் இல்லை எனவும் அதன் காரணமாக உயர் தேசிய கணக்கியல் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்க முடியாது எனவும் ஆளுநர் தெரிவித்ததாகவும் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே அரச சேவையில் பல உயர் தேசிய திப்புளோமாப் பட்டதாரிகள் பல்கலைக் கழகப் பட்டத்திற்குச் சமமான தகைமையைக் கொண்டுள்ளார்கள் எனும் அடிப்படையில் உள்வாங்கப்பட்டுள்ளனரே என சங்கத்தினரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்ட ஆளுநர் இவ்விடயம் தொடர்பான எழுத்து மூல பதிலை மிக விரைவில் இச்சங்கத்தினருக்கு (7ம் பக்கம் பார்க்க)

# மலேசிய வேலை வாய்ப்பு மோசடி பல லட்சம் ரூபாய்களை இழந்தனர் திருமலை இளைஞர்கள்

முகவெளி (Facebook) சமூகவலைப்பின்னல் ஊடாக திருக்கோணமலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் பல லட்சம் ரூபாய்களை மோசடி செய்துள்ளது அம்பலமாகியுள்ளது. தற்போது மலேசியாவில் வேலை செய்துவரும் அவ் இளைஞன் அங்கு வேலைவாய்ப்புக்களை மிகக் குறைந்த செலவில் பெற்றுத் தருவதாகக் கூறியே பண வைப்புக்களைப் பெற்றுள்ளான். அம்மோசடிக்கார இளைஞன் குறிப்பிட்ட தொகை எல்லோராலும் செலுத்தக்கூடிய தொகையாக இருந்ததால் பெருமளவு இளைஞர்கள் குறிப்பிட்ட வங்கிக் கணக்கில் தொகைகளை வைப்பிலிட்டுள்ளனர்.

ஆரம்ப வைப்புத் தொகையைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவனுடனான தொடர்புகளை வைப்பாளர்கள் இழந்துள்ளனர். ஆரம்ப வைப்புத் தொகையாக ஒவ்வொருவரிடமும் சுமார் 40.000 ரூபா தொடக்கம் 70.000 ரூபாவரை வைப்புக்களைப் பெற்றுக்கொண்டுள்ளான் அந்த இளைஞன். தனது தகப்பனார் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையில் வேலை செய்வதாகவும் கதை விட்டுள்ளான். இக்கதைகளை நம்பிப் பல வறிய இளைஞர்கள் பணவைப்புக்களைச் செய்துள்ளனர்

(முழுவிபரங்களையும் பக்கம் 7ல் காண்க)

## ஆவணங்கள் எதுவுமின்றி உந்துருளியிற் சென்ற பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர்

கடந்த மாதம் 2ம் திகதி உப்புவெளி பிரதேச சபை எதிர்கட்சி தலைவர் உந்துருளியில் பயணம் செய்த பொழுது நிறுத்தும்படி. போக்குவரத்து காவல்துறையினர் சைகை செய்திருக்கின்றனர். அவ்வாறு சைகை காட்டியும் எதிர்க்கட்சி தலைவர் நிறுத்தாமல் சென்றிருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து துரிதமாக செயல் பட்ட காவல்துறையினர் எதிர்க்கட்சித் தலைவரை மடக்கி (7ம் பக்கம் பார்க்க)

## பயிற்சியாளர்களைப் பகிடிவதைக்குள்ளாக்கிய தனியார் வங்கி ஊழியர்

திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து இலங்கையின் பிரபல தனியார் வங்கிக்கு வங்கிப் பயிற்சியாளராகச் சென்ற இளைஞன் சிரேஸ்ட அலுவலர்களால் பகிடிவதைக்குள்ளாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் முதல்தர வங்கிகளில் ஒன்றான மேற்படி வங்கியின் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள பிரதேசமொன்றின் கிளைக்குப் பணிக்காகச் சென்ற இளைஞனை மதுவருந்தச் சொல்லி வற்புறுத்தியும் இரவுக் களியாட்டங்களுக்கான தயார்ப் படுத்தல்களை (7ம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டை மத்திய கல்லூரிக்கு மகிந்தோதயத் தொழில் நுட்பக் கூடம்

மகிந்தோதயத் தொழில் நுட்பத் திட்டத்தின் கீழ் புல்மோட்டை மத்திய கல்லூரியில் 30 அடிக்கு 80 அடி நீள அகலம் கொண்ட இரு மாடிக் கட்டிட தொழில் நுட்ப நிலையமொன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. ஆயிரத்தி முன்னூற்று எழுபத்தேழு மாணவர்கள் கல்வி கற்கும் இப் பாடசாலையில் அதிபராக எம்.பி. றசாக் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவதாகவும் 57 ஆசிரியர்கள் அவரின் கீழ் (7ம் பக்கம் பார்க்க)

## ஞாயிறு தரிசனம் அலைவரிசையில

மாலை 6 மணி - இரவு 8.30 மணி சன் கேபிளில் 16வது அலைவரிசை சட்லைட் கேபிள் விசனில் SCV அலைவரிசையில்

**வணக்கம் தரிசனத்தில்:**

அருட்பணி வணபிதா.நிதிதாசன் அடிகளுடன் நேர்காணல்

**தரிசனத்தின் நத்தார் செய்தி**

**தரிசனத்தின் நத்தார் கரோல் பாடல்கள்**

**சண்முக வித்தியாலய பழைய மாணவிகளின் கதம்ப மாலை**

**திருமலைக் கலைஞர்கள் கலக்கும் நகைச்சுவைத் தொடர் நாடகம் - வாத்தியும் வைத்தியும்**

**குட்டில் சிறார்களின் கலைநிகழ்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

**உலக அழிவு என்னும் மாயை**

21ம் திகதியுடன் உலகம் இருண்டு அழியத் தொடங்கிவிடும் என பரப்பப்பட்ட வதந்தியினால் சொல்லெனாத் துயரங்களை மக்கள் அனுபவிப்பதைக் காண முடிகின்றது.

பலர் உலகத்தின் அழியாத பகுதி நோக்கி நகரத் தொடங்கியுமிருக்கின்றனர். இந்த வதந்திகளுக்கெல்லாம் அடிப்படையாக இருந்தது மாயன் நாட்காட்டி ஆகும். தென் அமெரிக்க கண்டத்தில் பல நூறு வருடங்களுக்கு முதல் செழிப்புற்று விழங்கிய மாயன் என்னும் சமூகத்தினரதும் அவர்களது அறிவு சார் திறன்களினதும் பயனாக அவர்களால் எழுதப்பட்டதாக கருதப்படும் நாட்காட்டி எதிர்வரும் 21ம் திகதிவரைக்குமான காலப்பகுதிக்கே தொல்பொருளியலாளர்களால் தற்போது வரை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்நாட்காட்டியில் குறிக்கப்பட்ட விடயங்களிற் பெரும்பாலானவை நடந்தேறியுள்ளதாகச் செய்திகளும் வெளியாகி அந் நாட்காட்டியினை ஒரு கடவுளாக கடவுளை நம்பும் மக்களிற்கு முன் நிலைப்படுத்தப்பட்டது.

அவ்வாறு முன்னிலைப் படுத்தப்பட்டமைக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பதை யாருமே சிந்திக்க முயற்சிக்கவில்லை. அந்த முன்னிலைப்படுத்தலுக்குப் பின்னால் இருந்தது உலகின் மிகப் பெரும் பணமுதலைகளே. அவர்கள் நாட்காட்டியினை முன்னிலைப்படுத்தி அதனைக் கடவுளாக்கி அதனை கொலிவூட்டில் படமாக்கிப் பல பில்லியன் ரூபாய்களைப் பணமாக்கியும் பார்த்துவிட்டார்கள். அது போதாதென்று குறிப்பிட்ட சில நாடுகளில் நிலங்களைக் கொள்வனவு செய்த அவர்கள் அந்நாடுகளே இவ்வழிவிலிருந்து தப்பப் போகும் நாடுகள் எனும் தகவல்களை பிரசித்திபெற்ற ஊடகங்களூடாக கசிய விட்டு அந் நாடுகளின் நிலங்களின் விலைகளை அசாத்திய அளவிற்கு உயர்த்தி பணமுழைக்கும் பணியில் இருக்கின்றார்கள்.

நாங்கள்? அறிவுள்ளவர்கள் என்று சொல்லிக்கொண்டே முட்டாள்களாகிக் கொண்டிருக்கின்றோம். உலகம் அழியும் செய்திகளை மகிழ்ச்சிக்காக மற்றவர்களுடன் குறம்செய்திகளாகப் பரிமாறிக் கொள்கின்றோம். அச் செய்திப் பரிமாற்றத்தின் ஊடாக பயமுழைத்துக் கொள்பவர்கள் யார்? என்று என்றுமே நாம் கேள்வி கேட்டதில்லை. குறுச்செய்திக்கான செலவு என்ன வெறும் 50 சதம் தானே என நீங்கள் வாதிடலாம். ஆனால் இலங்கைச் சனத்தொகையின் அரைப்பங்கு மக்கள், ஒரு கணக்கிற்கு 10 லட்சம் மக்கள் எனக் கொள்வோமே, தம்மிடையே ஒரு தடவை உலக அழிவுக் குறுஞ் செய்தியைப் பரிமாறினால் கம்பனிகள் உழைத்துக் கொள்ளும் வருமானம் எவ்வளவு என எண்ணிப்பாருங்கள்.

உலக அழிவென்பதை ஏன் எதிர்வுகூற முயற்சிக்கின்றீர்கள்! அது ஆரம்பித்து விட்டது வாசகர்களே! நாம் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களை சாவு கொடுக்கவில்லையா? ஈராக் நாளாந்தம் 100 மக்களை சாவு கொடுக்கவில்லையா? ஆப்கான், சிரியா, அமெரிக்கா, சீனா, இந்தியா, திபெத்..... 23ம் திகதி நான் நிச்சயமாக உங்களைச் சந்திப்பேன்... -ஆசிரியர்-

# புதிய இன்குபேட்டர்களைப் பெற்றுக்கொண்டது பொது வைத்தியசாலை

(கதிரவன்)

ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலை பொது வைத்தியசாலை சிறுவர் பிரிவுக்கு 3.3.மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான 2 இன்குபேட்டர் கருவிகளை வழங்கி வைத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை 11.12.2012 வைத்தியசாலைக்கு விஜயம் செய்த ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்தின் திட்ட பணிப்பாளர் நிரோசன் இதனை பொது வைத்தியசாலை அத்தியட்சகர் மருத்துவர் ஈ.ஜி.ஞானகுணாளனிடம் கையளித்தார். இந் நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் திருகோணமலை கிளை நிறைவேற்று பணிப்பாளர் ரவிச்சந்திரனும் கலந்து கொண்டார்.





## காரமுனை மக்கள் கவனயீர்ப்புப் போரில் . . .

கடந்த புதன் கிழமை வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் மீள்குடியேற்றக் கிராமமான காரமுனை பிரதேசத்தில் கிரவல் எடுப்பதற்கு கனரக வாகனங்கள் பாதையை பயன் படுத்துவதால் அப் பாதை உடைந்து காணப்படுவதாகவும் கிரவல் எடுப்பதற்கு மாற்றுப் பாதையை பயன்படுத்தமாறும் கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தினை காரமுனை மக்கள் மேற்கொண்டனர். யுத்தத்தால் அழிந்த இவ் வீதி மகிந்த சிந்தனைத் திட்டத்தின் ஊடாக கிழக்கின் உதயம் வேலைத்திட்டத்தில் புணரமைக்கப்பட்ட இவ் வீதி மறுபடியும் சேதமடைந்துள்ளதாக இம் மக்கள் தெரிவிக்கின்றனர்


## " கிழக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவை" ஆராய்ந்தனர் மாகாண அமைச்சர்கள்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சும் இணைந்து "கிழக்கு மாகாணத்தின் எதிர்காலத் தேவை" எனும் தலைப்பில் கடந்த திங்கட்கிழமை வீதி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சர் ஹாபிஸ் நசீர் உட்பட அமைச்சர்களும் அவ் அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் .கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், வீடமைப்பும் நிர்மாணமும், கிராமிய மின்சாரம், நீர்வழங்கல், விவசாயம், மீன்பிடி, கால்நடை, கிராமிய கைத்தொழில் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டதுடன், இதற்கான முன்மொழிவுகள் அமைச்சர்களால் முன்வைக்கப்பட்டது .

# "காற்றிழுத்து வந்த மீனவர்களை கையளித்தது திருமலை நீதிமன்று"


கடந்த வாரம் புல்மோட்டை கடற் பரப்பில் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களும் திருகோணமலை நீதவான் ஏ.எச்.எம்.அஸ்வர் முன்னிலையில் முன்னிலைப்படுத்தபபட்டு கடந்த திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர் .

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களையும், ஐந்து ரோலர் படகுகளையும் இந்திய உயர் ஸ்தானிகராலய விஸா அதிகாரி ரமேஸ் ஐயர் துறைமுக பொலிஸாரிடம் இருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.



# களஞ்சியசாலையாக மாறும் பூப்பந்தாட்ட மைதானம்

கிழக்கின் மிகச் சிறந்த உள்ளக விளையாட்டுத் திடலாகவும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டதுமான திருமலை நகரசபைக்குச் சொந்தமான மக்கெய்சர் விளையாட்டுத் திடலிலுள்ள பூப்பந்தாட்ட மைதானம் களஞ்சிய சாலையாக மாறி வருவது கவலையளிப்பதாக விளையாட்டு வீரர்கள் கவலை



தெரிவித்துள்ளனர்.

கவனிப்பாரற்றுப் போய்க்கிடக்கும் இம் மைதானத்தில் கடந்த மாதத்தில் ஒரு நாள் அதன் வலை அவிழ்க்கப்பட்டு ஜிம்னாஸ்டிக் பயிற்சிகள் மேற்கொள்ள அவ் விளையாட்டுத் திடல் பயன்படுத்தப் பட்டிருந்ததாக பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்.

பூப்பந்தாட்ட வலையினை கழற்றி ஜிம்னாஸ்டிக் பயிற்சியை மேற் கொண்டவர்கள் அவ்வாறே அவ் வலையினை விட்டுவிட்டு வெளியேறியிருந்ததுடன் ஜிம்னாஸ்டிக் படுக்கை துண்டுகளை அவ்விடத்திலேயே அடுக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

திருமலை நகரசபையின் அதிகாரவாணைக்குள் இருக்கும் இப் பூப்பந்தாட்ட மைதானம் பலநாட்கள் தங்குமிட விடுதியாகவும், அவ்வாறு தங்கிச் செல்பவர்களின் மதுச்சாலையாகவும் பாவிக்கப்பட்டுவருவதை பயிற்சிக்குச் செல்பவர்கள் பல தடவைகள் அவதானித்துள்ளனர்.

மிகச் சிறந்த உள்ளக விளையாட்டுத்திடலின் தற்போதைய நிலையினைப் படங்களிற் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "படர்க்கை"

### கலை இலக்கிய சஞ்சிகை

2013ம் ஆண்டின் முதற்காலாண்டில் திருக்கோணமலையிலிருந்து வெளியிடப்படவுள்ள கலை இலக்கியக் காலாண்டு சஞ்சிகைக்கு அனைத்து வகைப்பட்ட தரமான ஆக்கங்களும் எதிர்பார்க்கப்படுவதாக அச் சஞ்சிகையின் சிரேஸ்ட ஆசிரியரான திரு. நந்தினி சேவியர் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ஆக்கங்களை அனுப்பிவைக்க முடியும் என்பதுடன் வெளிநாட்டு எழுத்தாளர்களும் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். ஆக்கங்களை மின்னஞ்சலிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறும் அவர் ஆக்ககர்த்தாக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆக்கங்களை அனுப்புவதற்கு ஆசிரியர்,படர்க்கை, இல 159 A, கடல் முகவீதி, திருக்கோணமலை எனும் தபால் முகவரிக்கோ அல்லது tpad03@gmail.com எனும் இலத்திரனியல் அஞ்சலையோ பயன்படுத்துமாறு அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

SS Digital's
Printers for all requirements
2013
நாட்காட்டிகள்
அச்சிடப்படும்
#58, Vidyalayam Road, Trincomalee.
Off: 026 2224933 Mob: 0715415854, 0773663103
ssdigitals.shan@gmail.com

# அழித்தோய்ந்த பின்னும் ஒளிப்படங்களை வைத்து அரசியலில் பிழைக்கும் இந்திய காங்கிரஸ்



கூகுளில் முள்ளிவாய்க்கால் என்றோ, வன்னிப்போர் என்றோ ஸ்ரீலங்கா என்றோ படங்களைத் தேடுகின்ற ஒருவருக்கு கிடைக்கக்கூடிய அவலங்கள் நிறைந்த நூற்றுக்கணக்கான ஒளிப்படங்கள் அந்தப் போரின் உண்மை முகத்தினை உலகின் முன் சாட்சியாக வைத்துள்ளன.

இத்தகைய ஒளிப்படத்தை எடுத்து தமது தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்திக் கொள்ளப்போய் இந்திய காங்கிரஸ் கட்சி தனது தலையிலேயே மண்ணை வாரிக் கொட்டிக்கொண்ட சம்பவமும் நடந்தேறியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் நரேந்திரமோடி தலைமையிலான பாஜக ஆட்சியைக் கவிழ்க்க காங்கிரஸ் கட்சி படாதபாடு படுகிறது.

மூன்றாவது தடவையும் நரேந்திரமோடியே ஆட்சியமைப்பார் என்ற கருத்துக் கணிப்புகளுக்கு மத்தியில், அடுத்த வாரம் தேர்தல் நடைபெறப்போகும் குஜராத்தில், காங்கிரஸ் கட்சி ஒரு விளம்பரத்தை வெளியிட்டது.

பத்திரிகைகள், தொலைக்காட்சி, இணையதளங்களில் காங்கிரஸ் கட்சி வெளியிட்ட அந்த விளம்பரத்தின் நோக்கம் மோடியின் ஆட்சியில் குஜராத்திலுள்ள ௪௫ வீதமான குழந்தைகள் போசாக்குகுறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்துவதேயாகும்.

குஜராத்தில் எடுக்கப்பட்ட போசாக்கு குறைபாடு பற்றிய புள்ளிவிபரங்களுக்கு உயிரூட்ட ஒரு ஒளிப்படம் தேவைப்பட்டது காங்கிரஸ் கட்சிக்கு.

ஆனால் குஜராத்தில் அப்படியொரு ஒளிப்படத்தை அவர்களால் எடுக்க முடியவில்லை போலும். இணையத்தில் தேடிப்பிடித்து ஒரு படத்தை எடுத்து போட்டிருக்கிறார்கள். அப்படம் இந்தளவுக்கு சர்ச்சையைக் கிளப்பும் என்று காங்கிரஸ் கட்சி எதிர்பார்த்திருக்காது.

அந்த ஒளிப்படம் முள்ளிவாய்க்கால் பகுதியில் எடுக்கப்பட்டது. கூடாரம் ஒன்றில் இயங்கிய மருத்துவ உதவி நிலையத்தில் போசாக்கு குறைபாடுள்ள மூன்று மாதக் குழந்தையை கையில் ஏந்தியபடி நிற்கும் தாயின் ஒளிப்படம் அது.

௨௦௦௯ மே ௬ம் திகதி மாலை ௪:௨௩ மணியளவில் எடுக்கப்பட்ட ஒளிப்படம் அது.

## "உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் 2013 ஜனவரியில்"

2012ன் ஓகஸ்ட் மாதம் நடந்து முடிந்த க.பொ.த உயர் தரப் பரீட்சையின் பெறுபேறுகள் 2013ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் உறுதியளித்துள்ளார்.

ஏற்கனவே இரண்டு ஆண்டுகளாக உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்கள் இன்னமும் பல்கலைக் கழகத்திற்கு உள்வாங்கப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வரலாற்று உருவாக்கக் கால திருகோணமலை.

உலக வரலாறுகள் உருவாக்க காலம் என்பது கிட்டத்தட்ட கிறிஸ்துக்கு பின் வந்த காலப் பகுதிகளை ஒட்டித்தான் காணப்படுகின்றன. அப்படித்தான் இலங்கை வரலாறும் கி.மு 500 ஆண்டளவில் விஜயன் வருகையோடு தொடங்குகிறது என்று வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கின்றனர்.

ஆனால் மகாவம்சம் விஜயன் வருகைக்கு முன்னரான திருகோணமலையில் இறுக்கமான ஒரு ஆட்சி முறை இருந்ததை வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் சில இடங்களில் சொல்லாமலும் இல்லை.

அப்படித்தான் விஜயனது வருகைக்குப் பின்னரான சம்பவம் ஒன்றை கூறும் மகாவம்சம் நம் தேடலை அதிகரித்து சென்று விடுகிறது ,

விஜயன் வருகைக்கு பின்னர் விஜயனுக்கு வாரிசு இல்லாமல் போகவே விஜயன் தனது வாரிசுக்காக கலிங்க நாட்டில் இருந்து தனது தம்பி சுமிதனின் மகனான பாண்டு வாசுதேவனை இலங்கை தீவில் உள்ள தனது ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்துக்கு அழைக்கிறான்.

அப்படி அழைக்கப்பட்ட பாண்டு வாசு தேவனும் அவனுடைய 32 மந்திரிகளும் துறவிகள் வேடம் பூண்டே திருகோணமலை துறைமுகத்தை அடைந்ததாக மகாவம்சம் கூறுகிறது.

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு நமக்கு ஒரு கேள்வி எழுகிறது.

பாண்டு வாசு தேவனும் அவனது மந்திரிகளும் மாறு வேடத்தில் திருகோணமலைக்கு வர காரணம் என்ன

அப்படியானால் விஜயனது கூட்டத்திற்கு எதிரானவர்களின் கட்டமைப்பு திருகோணமலை பகுதியில் இருந்திருக்க வேண்டும். அதன் காரணமாகவே இக்குழுவினர் மாறுவேடத்தில் வந்திருக்கின்றனர். இவ் மகாவம்ச குறிப்பில் இருந்து இன்னும் ஒன்று புலப்படுகிறது. இங்கு வாழ்ந்த மக்கள் துறவிகளை மதிக்கத் தக்கவர்களாக வாழ்த்திருக் கின்றனர். ஆகவேதான் பாண்டு வாசுதேவன் குழுவினர் துறவி வேடத்தை தேர்ந்து எடுத்திருகின்றனர்.




ஒழுங்கான ஆட்சி முறையுடன் இம் மக்கள் வாழ்ந்தார்கள் என்று நிரூபிக்க மகாவம்சத்தில் இன்னுமொரு குறிப்பு காணப்படுகிறது.

துட்டகைமுனு எல்லாளன் போரை பற்றி குறிப்பிடும் மகாவம்சம் எல்லாளனை துட்டகைமுனு வெல்வதற்கு முன்பு 32 தமிழ் அரசுகளை வென்றதாக கூறுகிறது.

அதுமட்டும் அல்லாது அக் காலத்தில் மிகப்பிரபலமாக இருந்த கோகர்ணம் (திருமலை) துறைமுகப் பகுதியை எந்த ஆரிய வம்சத்தில் இருந்து வந்த ஆட்சியாளனும் ஆண்டதாக் குறிப்பிடப்படவில்லை.

ஆரிய வம்சத்துக்கு ஆதரவாக .எழுதப்பட்ட நூலில் அடிக்கடி கோகர்ணம் (திருமலை) சவாலுக்குரிய பகுதியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அவர்களின் செல்வாக்கு குறைவான இடம் என்பதை மட்டும் காட்டுகிறது . அப்படியானால் அந்த 32 அரசர்களில் யாரோ ஒருவனால் இப்பகுதி ஆளப்பட்டு இருக்கிறது என்பது சந்தேகமில்லாமல் புலப்படுகிறது.

இவ்வாறு சவாலுக்குரிய பிரதேசமாக இருந்த கோகர்ணம் வழிபாட்டு ரீதியாகவும் அக்காலத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தியிருந்தது.

கி. மு 300 ஆண்டு காலப்பகுதியில்தான் இலங்கையில் சைவ மற்றும் பிராமணர்களின் செல்வாக்கு அதிகரிக்க தொடங்கிய காலம் எனலாம். இதற்கு முக்கிய கார்ணம் வியாபார தொடர்புகள்தான். இவ்வாறுதான் சமணமும், தேவாதார மற்றும் மகாயான பௌத்தங்கள் நிறுவன ரீதியாக இலங்கை தீவில் காலடி எடுத்து வைக்கின்றன.

கி .மு. 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மகாயான பௌத்தத்துக்கு மாறிய மகாசேனன் கோகர்ணம் (திருகோணமலை) , எரகாவில்லை (ஏறாவூர்) மற்றும் இலங்கை தீவின் கிழக்கு பகுதியில் இருந்த பிராமணன் கந்தளாய் ஊர் ஆகிய வற்றில் இருந்த லிங்க கோவில்கள் அழிக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது.

மகாசேனனால் அழிக்கப்பட்ட மூன்று லிங்க வழிபாட்டு தலங்களும் இருந்த இடங்கள் திருகோணமலையை அண்டிய பிரதேசங்களில் தான் இருந்திருக்கின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் பலமான தென்னிந்திய தொடர்பை திருகோணமலை கொண்டிருந்திருக்கிறது .

ஏன் என்றால் இலங்கையில் லிங்க வழிபாடு என்பது ஆதார ரீதியாக இலங்கை ஆதிக்குடிகளிடம் இருக்கவில்லை. கந்த, வேல் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட முருக வழிபாடுதான் இவர்களிடம் இருந்தது. அப்படி காணப்பட்ட திருகோணமலையில் வணிகர்களின் வருகை மூலமே லிங்க வழிபாடு அறிமுகப்படுத்த பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு திருகோணமலையில் லிங்க வழிபாடு ,மற்றும் மகாயான புத்த மதங்கள் போட்டி போட்டு கொள்ள முருக வழிபாடு அழியாமல் தனித்துவமான வழிபாட்டு முறையாக கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரை சிறப்பாக இருந்ததை சூளவம்சம் சில புனைவுகளுடன் எடுத்துரைக்கிறது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு காலப்பகுதியில் மானவர்வன் என்ற இளவரசன் கந்தக்கடவுளை நினைத்து வேள்வி செய்ததாகவும் அப்போது கந்த கடவுள் மயில் பறவையில் வந்து காட்சி தந்ததாகவும் பாளி இலக்கியமான சூளவம்சம் குறிப்பிடுகின்றது.

இன்னும் நடுவோம் ...

கா .செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்த வரை...

தாமரைத்தீவான்

**26.08.2012 ல் வெளியான ஐந்தாவது மலைமுரசில் மதிப்பிற்குரிய நந்தினி சேவியர் அவர்களின் கட்டுரை தொடர்பான தனது மனப்பதிவுகளை மதிப்பிற்குரிய தாமரைத்தீவான் இங்கு வரைந்துள்ளார்**



பற்குணத்தார் காலத்தில் அடிக்கடி கூட்டம் நிகழும். உரிய அறிவித்தலகளை மதிப்பார்ந்த நந்தினி சேவியர் அவர்கள் வீடுதேடி வந்து தருவார். சேவை செய்தார். நண்பன் போல்- நல்ல மனிதன் போல் இருந்தார். தற்போது தலைகீழாய் மாறிவிட்டார். நான் ஏதோ மாபெரும் பிழையைச் செய்து விட்டேனாம்.

26.08.2012 / 5ம் முரசு / 4ம் பக்கத்தில் 'பெற்றதும் கற்றதும்' எனும் தலைப்பில் விளாசித் தள்ளியிருந்தார். பார்த்தோர் படித்திருக்கலாம்! 26.05.2012ல் எனது 'கற்றதும் பெற்றதும்' நூல் வெளியீடு பெருந்தெரு 'விக்நேஸ்வரா' வில் நிகழ்ந்தது. அதில் குறிப்பிட்ட இருவர் வராமையால் நடத்துநர் தற்காலிகமாய் இருவரை என் விருப்புடன் ஒழுங்கு செய்தார். அதில் ஒருவர் நந்தினி சேவியர் அவர்கள். 'அறிவித்தல் கொடுத்தவர் அவரைத் தவறவிட்டு விட்டார். நூலும் பிந்தியே கிடைத்துள்ளது. பார்த்திருக்கிறார், அதில் அவர் பெயர் கடைசியில் (102ம் பக்கம்) சிறுமைப்படுத்தப்பட்டிருந்தது. கொதிப்படைந்து போனார். மேடையில் வருந்திச் சொல்லியும் விட்டார். யாவையும் தனது மலைமுரசுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். 'அற்றமமறைக்கும் பெருமை சிறுமைதான் குற்றமே கூறிவிடும்' (980குறள்).

நடந்தது இதுதான். இந்நூல் பல ஏடுகள், நூல்கள், குறிப்புக்களிலிருந்து திரட்டப்பட்ட ஒன்று. முழுக்கப்படித்தோர் அறிவர். நான் என்ன பாடு பட்டிருப்பேன் என்று.

சங்க நூல்கள், பாடல்கள், பெரியார்கள் பற்றிய முழுக்கவனத்தால் எழுத்தாளரில் சிலர் விடுபட்டு விட்டனர். அகவை முதிர்வால் மறந்தும் போச்சு. அச்சகத்துக்கும் போயிற்று.

சரவை பார்த்த போதில் நினைவு வர கடைசியில் சேர்த்துப் போடவேண்டியதாயிற்று. பிழை தான், வருத்தப்பட்ட மற்றவர்கள் கொதிப்படையவில்லை.

அதனால் தான் அவர் கூறுகையில் மௌனம் காத்தேன். திட்டமிட்டு வேண்டி வினை செய்யவில்லை. இன்னுமொன்று, நூற்பெயர் 'கற்றதும் பெற்றதும்'. அவரின் 'அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்' நூல் நான் கற்கவில்லை (கிடைக்கவில்லை)

ஆயினும் அவர் பெயரைப் போட்டேன். அது பிழையாயிற்று. சினமாயிற்று. 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும் ஏமப்புணையைச் சுடும்' (306 குறள்). நட்புப்பறந்தது. எதிரிபோலாகலாமா? (ஆறுவது சினம்)

'அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின் வழிவந்த கேண்மையவர்? (807 குறள்)

நானென்ன கொலை செய்தேனா? கொள்ளை அடித்தேனா? நாட்டைக் கவிழ்க்கும் குள்ளநரி வேலை செய்தேனா?(மனோகரா).

இது பெருங்குற்றமா? இதற்காகச் சினப்பதா? 'நந்தினி சேவியர் பொல்லாதவரப்பா, கடும் ஆள்' என நால்வர் சொல்ல வேண்டும் என்றா? 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் (314 குறள்)

இயேசு வழி இதுதானா? ஒவ்வொருவருள்ளும் இன்னொருவர் உள்ளார் என்பது உளவியல். இதுவரை கண்டது வெளி நந்தினி சேவியர். என் நூல் உள் நந்தினி சேவியரைக் காட்டிவிட்டது.

நல்லது தான். அன்றைய மேடைக்கூற்றுடன் சரி என நினைத்தேன். கொதிப்பு விட்டபாடில்லை. மலைமுரசு வாய்ப்பாகி விட்டது போலும். கொட்டித்தீர்த்து விட்டார். இதற்கும் ஏதும் வரையலாம்! **முரசும் காத்திருக்கிறதோ!** (எழுதட்டும், போடட்டும், படிக்கட்டும், தெரிந்தோர் சிந்திக்கட்டும், தெரியாதோர் கண்மூடி நம்பட்டும்.)

அயல் கிராமத்தைச் சேர்ந்த, நெல்லிமரத்துப் பள்ளிக் கூடப் பெரும் சிறுகதை எழுத்தாளப் பழம் நண்பரே, நீங்கள் வெறுத்தாலும் நான் வெறுக்கேன். நாம் எழுத்தாளர். ஒன்றுபடுவோம்.

'சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே (நறுந்தொகை). விரும்பாவிடில் நீங்கள் உங்கள் பாடு, நான் என் பாடு (இன்னும் சில நாட்களே).

ஆனால் எழுதுங்கள் எரிவையல்ல, கொதிப்பையல்ல, நல்ல பொளுள்ள கருத்துக்களை! முரசு முழங்கட்டும், நான் செவிமடுக்கின்றேன். உங்கள் காழ்ப்புணர்வு எனக்கில்லை. மருமக்கள் மாமாவின் பின்னால் நிற்பர். அவர்கட்கு நல்வழி காட்டுங்கள். சரிதானே வணக்கம்! என்னைப் பெருங் கவிஞர் என்று கட்டுரையில் குறித்துள்ளீர்கள். நான் என்னைக் கவிஞன் என்று எங்கேயும் கூறியதில்லை.

செய்யுளில் சில கருத்துக்களைத் தெரிவிப்பேன். (நல்லதுன்னாக் கேட்டுக்குங்க, அல்லதுன்னா விட்டிடுங்க என்பது போலவே) 'கொடகே- சாகித்திய' விருதுகளுக்கு வாழ்த்துக்கள்!

'வெண்மை எனப்படுவது யாதெனில் ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு (844குறள்).

**தாமரைத்தீவான் அவர்கள் தனது எதிர்வினையில் "முரசும் காத்திருக்கின்றதோ!" என விளித்திருப்பதன் ஊடாக மலைமுரசின் பணியை தெளிவாக வெளிக் காட்டியுள்ளார். ஆம்! மலைமுரசு உள்ளூர்க் கலைஞர்களின், எழுத்தாளர்களின் முயற்சிகளையும் வரைவுகளையும் வெளிக்கொணர் வதற்காய் காத்துக் கிடக்கின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்வீர்கள் என நினைக்கின்றேன்.**

– நன்றி – (ஆசிரியர்)

# நகராட்சி மன்ற நூலகம்

## - தெளிவும் தேவையும் -

திருகோணமலை பொது நூலகம் அல்லது திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகம் என்று அழைக்கப்படும் இந்நூலகம் பொதுமக்கள் பாவனைக்காகத் திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் பராமரிக்கப்படும் நூலகமாகும்.

இங்கு மாணவர்களுக்கு அவர்களுடைய கல்வி துறை சார்ந்த நூல்கள் தேவைக்கேற்ப அளவாகவே உள்ளது ஆனால் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சமுதாய விழுமியங்கள், புராதன வரலாறுகள், கலாச்சார ஒழுங்கு முறைகள், வாழ்க்கை முன்னேற்றம் இது தொடர்பான நூல்கள் இங்கு அரிதாகவே உள்ளன. தோல்வி அடைந்தவர்களின் கருத்துக்களை நீங்கள் கேட்பீர்களானால் அவர்கள் பெரும்பாலானோர் தோல்வி அடைவதற்கு காரணம் அவர்களுடைய ஆளுமை மற்றும் ஆற்றல் வெளிக்கொண்டுவரப்படாததுதான் என்பதை நீங்கள் அறியலாம். நெப்போலியன் தம்முடைய படைகளை இரவில் பார்வையிட்டுக் கொண்டு வரும் பொழுது படைகாவலன் தூங்கிவிட்டான். அவனுடைய கையிலிருந்த துப்பாக்கி நலுவிக் கீழே விழுந்துவிட்டது. நெப்போலியனின் காலடிச் சத்தம் கேட்டதும் பதறி எழுந்தவன் கையில் துப்பாக்கியை காணோம் பக்கத்தில் இருந்த இரண்டு பேர் சேர்ந்தும் தூக்க முடியாத சிறிய ரக பீரங்கியை துப்பாக்கியென நினைத்து தூக்கி தோள் மீது வைத்துக்கொண்டான். இதைகண்ட நெப்போலியன் முறுவலித்துவிட்டு சென்றான். இவ்வாறு மனிதர்களிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவது வாய்ப்புக்களும் சூழலுமேயாகும். சூழல்களில் நண்பர்கள் போன்று புத்தகங்களும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. புத்தகங்கள் துன்பத்தில் இருக்கும் ஒருவனை முன்னேற்ற வழியில் அழைத்துச்செல்லவும், பெருஞ்சுமைகளை தாங்கி நிற்பவனை அந்தச்சுமைகளை மறந்து விட்டு செயலாற்றவும், நோயாளியை நோயின் கொடுமையை மறக்கச்செய்கின்ற உயிர் நண்பன் வேறு இல்லை. உரையாடல் ஒருவனை எதற்க்.கும் தயாரான மனிதனாக்குகிறது, எழுதுதல் ஒருவனைச் சரியான மனிதனாக்குகிறது, வரலாறுகள் ஒருவனை அறிவாளியாக மாற்றுகிறது, கணக்குகள் ஒருவனை நுன்மையனவனாக மாற்றுகின்றன, ஆனால் வாசிப்பு தான் ஒருவனை பூரண மனிதனாக்குகிறது. நமக்கு பிடித்த புத்தகங்களே நம்முடைய எண்ணங்களை உருவாக்குகின்றன. நமக்கு பிடித்தமான ஆசிரியர்கள் நம் வாழ்க்கையின் மானசீக குருவாக ஆகிவிடுகிறார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் நமக்கு அறிவுரைகளாக மாறிவிடுகின்றன. நாம் அவர்களுடைய கண்கள் மூலமாகவே உலகத்தைப் பார்க்கின்றோம். உயரிய நோக்கும், தெளிவான சிந்தனையும், ஆழமான கருத்துக்களும், பரந்த அறிவும் உடைய நூல்கள் நம்மை அவ்விதமே ஆக்குகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு சிறிய நூல் நிலையமாவது இருக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். அதில் அறிவு வளர்ச்சிக்கு தேவையான உயரிய நூல்கள் இருக்க வேண்டும். அச்சூழலில் வளரும் சிறுவர்களும், பெரியவர்களும் பெரும்பலனை அடைவார்கள் என்பது நிச்சயமே.

நம் வாழ்வை சீர்ப்படுத்திக் கொள்வதற்கு பல அறிவு சார்ந்த நூல்கள் வரலாறு தொடர்பான நூல்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாக உள்ள பிரபலங்களின் நூல்களை தேடி வாசிக்கும் கடப்பாடு நமக்கு உள்ளது. அவ்வாறு நம் தேடல்களை 75 சதவிகிதமேனும் பூர்த்தி செய்யும் நூல்கள் நம் நூல்நிலையத்தில் இருக்க வேண்டும். இவ்விடயம் குறித்து நாம் கேட்ட பல இளைஞர்கள், யுவதிகள் தங்களுடைய அதிருப்தியையே வெளிப்படுத்தினர் மற்றும்

பிரபல சிறுகதை எழுத்தாளர் நந்தினி சேவியர் இது பற்றி கருத்து தெரிவிக்கையில் திருகோணமலை நகர சபை நூல் நிலையத்தில் இளம் தலைமுறையினரின் நம் வரலாறு சம்பந்தமான அறிவுப்பசியை தீர்த்துக் கொள்வதற்கான நூல்கள் இங்கு பற்றாக்குறையாகவே இருந்து வருவதாகவும் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் இங்கு காணப்படுகின்ற இத்தகையசூழல் திருகோணமலையின் இளம் தலைமுறையினரிடையே நம் வரலாற்று நூல்களை தேடி வாசிக்கும் பழக்கத்தை குறைத்து விடக்கூடாதென்றும் அவர்கள் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நாம் அதை அவர்களுக்கு ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்றும் இது நாம் எம் சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய தலையாய கடமை என்றும் தன் கருத்தை நம்மிடையே பதிவு செய்து இருந்தார்

(பா.சுதர்சன்)




# "அப்பாடக்கர்"

*நீ என்ன அவ்வளவு பெரிய அப்பாடக்கரா ?*

நாம் அடக்கடி நீ என்ன அவ்வளவு பெரிய அப்பாடக்கரா என்ற வாரத்தையை தமிழ் சினிமாவில் கேட்டு இருக்கிறோம். அப்படியானால் அப்பாடக்கர் என்றால் என்ன ?

இது சென்னை செந்தமிழ். மகான் தக்கர் பாபா சென்னையில் இருந்தபோது சென்னை மக்கள் அவரை அப்பா தக்கர் பாபா என்று அன்போடு அழைத்தனர்.

வேதங்களிலும், ஞானங்களிலும் கரைகண்ட அவரிடம் ஆன்மீகம் தொடர்பாக எந்தக் கேள்வி கேட்டாலும் தெளிவான பதில் கிடைக்கும்.

அதேபோல ஒருவன் அவன் துறையில் தெளிவாக அனைத்தையும் தெரிந்தவனாக இருந்தால் அவன் பெரிய அப்பாதக்கர் என்று சொல்லப்பட்டு பின்னர் சென்னை உச்சரிப்பில் அப்படக்கர் ஆனது.

(நன்றி -ஜெயாகரன் )

## அடையாளப் பணிப் புறக்கணிப்பில் சட்டத்தரணிகள்

திருமலையின் சட்டத்தரணிகள் ஒரு மணி நேர அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள குற்றப் பிரேரணை தொடர்பாக அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் முகமாகவே இப் பணிப்புறக்கணிப்பை சட்டத்தரணிகள் மேற்கொண்டனர்.

12.12.2012ல் நீதிமன்ற வளாகத்துக்கு முன்னால் இவ்வடையாளப் பணிப் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முரசின் உலக வலம்

## சிரியாவைக் கைவிட்டது இரஸ்யா ?

சிரிய அரசின் மிகச் சிறந்த நண்பனான இரஸ்யா இந்த வாரத்தில் சிரிய அரசானது தனது கட்டுப்பாட்டைச் சிறுகச் சிறுக இழந்து வருவதாக தெரிவித்துள்ளது. அத்தோடு உள்நாட்டு யுத்தத்தில் விடுதலைப் போராளிகள் தமது வெற்றிகளைப் பதிவுசெய்து வருவதாகவும் இரஸ்யா தெரிவித்துள்ளது. என்றாலும் உடனடியாக இரஸ்யா சிரிய அரசை ஆதரிக்கும் தனது நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும் கொண்டு வரப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளது.

இரஸ்யாவின் இம் மதிப்பீடு விடுதலைப் போராளிகளின் கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. அண்மையில் இரண்டு மிகப் பெரிய இராணுவ நிலைகளை அரச ஆதரவுப் படைகள் விடுதலைப் படையிடம் இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்தும் சண்டைகள் அங்கு நிகழ்கின்றன.

## வடகொரிய ஏவுகணைப் பரிசோதனை - அதி உச்ச ஆத்திரமூட்டும் செயல் - அமெரிக்கா



வடகொரியாவின் ஏவுகணைப் பரிசோதனையானது அதி உச்ச ஆத்திரமூட்டும் செயல் என வெள்ளை மாளிகை பிரகடனம் செய்துள்ளது. கடந்த செவ்வாய்க் கிழமை நீண்ட தூரம் பாய்ந்து தாக்கும் ஏவுகணையொன்றை வட கொரியா பரீட்சித்துப் பார்த்தது. அதனைத் தொடர்ந்து உடனடியாக வெள்ளை மாளிகை இவ்வாறு தனது அறிக்கையைப் பதிந்துள்ளது.

இந் நீண்ட தூர ஏவுகணைப் பரிசோதனையானது வட அமெரிக்க நிலைகளின் மீதான ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாக வட அமெரிக்க வான்பரப்புப் பாதுகாப்புப் படைத் தலைமையகம் தெரியப்படுத்தியிருந்தது.

## தனது தீவுகளின் மீது வான் கண்காணிப்பில் சீனா - குற்றங்கூறும் ஜப்பான்

கிழக்கு சீனக் கடற்பரப்பிலுள்ள தீவுகளின் உரிமைகள் தொடர்பாகச் சீனாவிற்கும் ஜப்பானுக்கும் முறுகல் நிலை தீவிரமடைந்துள்ள நிலையில் அத்தீவுகளின் மீது சீனா தனது போர் விமானங்களைப் பறக்கவிட்டுள்ளதாக ஜப்பான் குற்றஞ்சாட்டியுள்ளது.

எட்டு எவ் 15 ரக போர் விமானங்களை அத்தீவுகளின் மீது சீனா பறக்க விட்டுள்ளதாக ஜப்பான் பெய்ஜிங்கிற்கு தனது கண்டனத்தை அறிவித்துள்ளது. 1958ம் ஆண்டிற்குப் பின் முதன் முதலாக ஜப்பானிய வான் பரப்பினுள் சீன விமானங்கள் ஊடுருவியுள்ளன.

ஜப்பானிய குற்றச்சாட்டுத் தொடர்பாக சீன வெளி விவகாரத்துறை அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. சீன வெளிவிவகாரத்துறைப் பேச்சாளர் இந் நடவடிக்கையை மிகச் சாதாரணமான பயிற்சி நடவடிக்கை என விளித்துள்ளார். அத்துடன் விமானங்கள் பறந்த தீவுக்கூட்டங்கள் சீனாவிற்கே சொந்தமானவை எனவும் அதனடிப்படையில் சீனா இத் தீவுக் கூட்டங்களை தனது எல்லை எனவும் அத் தீவுக் கூட்டக் கடற் பரப்பினுள்ளும் வான் பரப்பினுள்ளும் ஜப்பான் வரக் கூடாது என்று தெரிவித்துள்ளது.

தற்போது வரை ஜப்பானே இத் தீவுக்கூட்டங்களை பராமரித்து வருகின்றது. இவ்விரு நாடுகளுக்கும் மேலதிகமாகத் தாய்வானும் இத் தீவுக்கூட்டங்களை தமக்குரித்தானவை எனக் கோரி வருகின்றன.

இத் தீவுக்கூட்டங்கள் தற்போது ஏன் முக்கியத்துவம் பெற்றுள்ளன எனில் அத் தீவுக்கூட்டங்களின் படுக்கையில் எண்ணை வளம் கண்டுபிடிக்கப்பட்டதே ஆகும்.

உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6809

இவற்றில் 700க்கு உட்பட்ட மொழிகளில் மட்டும்தான் எழுதவும் பேசவும் முடியும்.

சொந்த வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள் வெறும் 100மட்டுமே

இவற்றுக்கெல்லாம் தாயாக, மூலமொழியாகளாக திகழ்பவை 6 மொழிகள் என கண்டறியப்பட்டுள்ளது.

1. எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
2. கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
3. இலத்தீன் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
4. சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
5. தமிழ்
6. சீன மொழி

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

- பிரதீபா -

1. நீர் வட்டம் எனப்படுவது பின்வருவனவற்றுள் எது?
   1. நீர் வட்டவடிவில் ஓடுதல்
   2. நீர்வீழ்ச்சி ஆறாக ஓடி கடலுடன் கலத்தல்
   3. நீர் ஆவியாகி ஒடுங்கி, மழைமுகிலாகி, மழையாக மீண்டும் நிலத்தை அடைதல்.
2. மின்னேரியா குளத்தை கட்டுவித்த மன்னன் யார்?
   1. மகாசேனன் 2. வசபன் 3. தாதுசேனன்
3. வாலை உடைத்துவிட்டுத் தப்பி ஓடும் பிராணி எது?
   1. பச்சோந்தி 2. பல்லி 3. மர அட்டை
4. குதிரை கட்டுமிடம் லயம் என்பது போல மாடு கட்டுமிடம் ...........
   1. பட்டி 2. தொழுவம் 3. குகை
5. பூரணமாக நீரில் மூழ்கியிருக்கும் தாவரம் எது?
   1. தாமரை 2. ஐதரில்லா 3. சல்வீனியா
6. சூரியனை ஒருமுறை சுற்றிவர 11.87 புவி வருட காலமெடுக்கும் கோள் எது?
   1. புளுட்டோ 2. புதன் 3. வியாழன்
7. "வளியின் அசைவே காற்றாகும்" கடலிலிருந்து தரையை நோக்கி வீசும் காற்று எவ்வாறு அழைக்கப்படும்?
   1. தரைக்காற்று 2. நீர்க்காற்று 3. கடல் காற்று
8. காந்தம் ஒன்றை நூல் ஒன்றில் கட்டி சுழற்றிவிடும் போது அது ஓய்வடைந்து ________, ________ திசைகளில் அதன் முனைகள் காணப்படும்.
   1. கிழக்கு, மேற்கு 2. வடக்கு, கிழக்கு 3. தென் கிழக்கு, வட மேற்கு
9. இலங்கையின் வடமேல் மாகாணத்தின் தலைநகரம் எது?
   1. குருநாகல் 2. கொழும்பு 3. கண்டி
10. ஒரு ஆணைச் சுட்டிக் காட்டி ராதா கூறினாள், அவர் எனது கணவரின் மனைவியின் மகளின் சகோதரர் என்று, மேற்படி ஆணுக்கும் ராதாவுக்கும் இடையிலான தொடர்பு யாது?
    1. மருமகன் 2. மகன் 3. அத்தான்
11. சஞ்சுவின் சுட்டெண் ஐந்து இலக்கங்களைக் கொண்டது. இரண்டாம், நான்காம் இலக்கங்கள் ஒற்றை எண்களாகும். கடைசி எண் மூன்றால் வகுபடக்கூடியது. எனின், அவனது சுட்டெண் எது?
    1. 21598 2. 22959 3. 23059
12. ஒவ்வொரு மணித்தியாலத்தின் ஆரம்பத்திலும் ஒரு குரங்கானது 30 மீற்றர் ஏறி ஒவ்வொரு மணித்தியாலத்திலும் 20 மீற்றர் சறுக்குகிறது. காலை 7 மணிக்கு அக்குரங்கு ஏறத் தொடங்கினால் 120 மீற்றர் உயரத்திலுள்ள ஒரு வாழைப்பழத்தை எடுக்க எத்தனை மணியாகும்?
    1. பி.ப 5 மணி 2. இரவு 6 மணி 3. பி.ப 4 மணி
13. மூன்று தொழிலாளர்களுக்கு ஒரு நாளில் கிடைக்கும் சராசரி வருமானம் ரூபா 950 ஆகும். ஒருவர் ரூபா 1150 உம் இரண்டாமவர் ரூபா 650 உம் உழைத்தனர். எனின் மூன்றாமவர் உழைத்த தொகை யாது?
    1. ரூபா 1150 2. ரூபா 1050 3. ரூபா 950
14. ஒரு மாதத்தின் பத்தாவது நாள் புதன்கிழமைக்கு முந்தின நாள் வருகின்றது. அம்மாதத்தின் ஐந்தாவது நாள் என்ன கிழமையில் வருகின்றது?
    1. செவ்வாய்க்கிழமை 2. புதன்கிழமை 3. வியாழக்கிழமை
15. கடிகாரத்தின் நேரம் ஐந்து மணியை அடையும் போது நிமிட முள் தென் மேற்குத் திசையில் அமைந்திருக்குமாயின், மணிமுள் எத்திசையைக்காட்டும்?
    1. தென் மேற்கு 2. தென் கிழக்கு 3. கிழக்கு
16. தொழிற்சாலை ஒன்றில் 2010 இல் 200 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 2011 இல் 215 உம் 2012 இல் 230 உம் உற்பத்தி செய்யப்பட்டன. எனவே 2016இல் உற்பத்தி செய்யப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை என்ன?
    1. 275 2. 305 3. 290
17. ரூபா 59 விலையுள்ள ஒரு பயிற்சிப்புத்தகத்தையும் ரூபா 17.50 விலையுள்ள அடிமட்டத்தையும் வாங்குவதற்கு என்னிடம் ரூபா 65 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?
    1. ரூபா 12 2. ரூபா 11.50 3. ரூபா 10.50

**18, 19, 20 ம் வினாக்களுக்கு கீழ்வரும் தகவலை வாசித்து விடையளிக்குக.**

சஞ்சு, டோலி ஆகிய இருவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 340 செ.மீ ஆகும். சஞ்சு, அம்மு ஆகியோரின் உயரங்களின் கூட்டுத்தொகை 355 செ.மீ ஆகும். மூவரினதும் உயரங்களின் கூட்டுத்தொகை 523 செ.மீ ஆகும்

18. அம்முவின் உயரம் யாது?
    1. 168 செ. மீ 2. 183 செ. மீ 3. 172 செ. மீ
19. மிகவும் உயரம் குறைந்தவர் யார்?
    1. சஞ்சு 2. அம்மு 3. டோலி
20. டோலி மற்றும் அம்முவின் உயரங்களின் கூட்டுத்தொகை யாது?
    1. 351 செ. மீ 2. 355 செ. மீ 3. 341 செ. மீ

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தேசிய திப்புளோமா

SLIATE

இன்றைய உலகம் கல்வி நிலையில் நாளுக்கு நாள் மாற்றங்களை கண்டு செல்லுகின்றது. ௨௧ம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் இலங்கையும் அவற்றுக்கு போட்டி போடும் வகையில் தனது கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது.

எவ்வாறு கல்வி முறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டாலும் உயர் கல்வி பெற்று வெளியேறுபவர்களை மட்டுப்படுத்தப்பட வேண்டிய தேவை அரசுக்கு உண்டு.

ஏனென்றால் உயர் கல்வி பெற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கான வேலை வழங்களை சமாளிக்க வேண்டிய அதி தீவிரப்பிரச்சனை அரசுக்கு உண்டு. இதன் காரணமாகவே வெட்டுப்புள்ளி என்ற திட்டத்தை பல்வேறு எதிர்ப்புக்கள் மத்தியிலும் நடைமுறைப்படுத்தியும் வருகிறது. சில வேளை வெட்டுப்புள்ளி திட்டம் நீக்கப்பட்டாலும் அதற்க்கு சமனான வேறு பெயரை கொண்ட வெட்டுப்புள்ளி திட்டம்தான் நடைமுறையில் இருக்கும்.

இவ்வாறு பட்டதாரிகளின் உருவாக்கத்தை கட்டுப்படுத்திய இலங்கை அரசுக்கு 1995 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்திக்காக உயர் தொழில் வல்லுனர்களை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த தேவையை பல்கலைகழகங்கள் ஊடாக உருவாக்குவதை தவிர்த்த உயர் கல்வி அமைச்சு உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தை உருவாக்கி அதன் ஊடாக பிராந்தியங்கள் தோறும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்கியது.

இச் செயல்திட்டத்தில் பொறியியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயம், ஆங்கில க்கல்வி மற்றும் கணக்கியல் பட்டங்களையும் அறிமுகப்படுத்தியது. தொடர்ந்து 1990 ம் ஆண்டு அக்டோபர் 30ல் வெளியான இலங்கை அரச சுற்றறிக்கையில் பல்கலைகழகங்களில் வழங்கப்படும் இளமானி பட்டத்திற்கு இணையானது என குறிப்பிடப்பட்ட உயர் தேசிய கணக்கியல் திப்ளோமாவே இக் கணக்கியல் பிரிவு பாட நெறியாக உள்வாங்கி கொண்டது.

இக் கணக்கியல் பாட நெறியானது நான்கு கல்வி ஆண்டுகளை கொண்டதாகவும் முழு நேர மாணவர்களுக்கு ஆறு மாதகால கணக்கியல் பயிற்சியையும் கொண்டதாக காணப்படுகிறது. இப் பட்டபடிப்பை தொடரும் மாணவர்களுக்கு அரச மஹாபொல திட்டமும் உள்ளது.

இவ்வாறு சகல வசதிகளும் அரசினால் ஏற்படுத்தப்பட்ட இப்பாட நெறியை வடக்கு கிழக்கு மாவட்டங்களில் உள்ள வெட்டுப்புள்ளியினால் பாதிக்கபட்ட வர்த்தகத் துறை மாணவர்கள் உட்பட இலங்கையில் உள்ள 11 உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஊடாகவும் ௬ உயர் தொழில்நுட்ப நிறுவன பிரிவுகள் ஊடாகவும் கல்வி கற்கின்றனர்.

இந்த கற்கை நெறியை இலங்கையில் உள்ள பல்கலைகழகங்கள் தங்களுடைய முதுமானிப்பட்டத்தின் அனுமதிக்கான தகுதியாக ஏற்றுக்கொள்வதோடு இலங்கை கணக்கியல் கற்கை நிறுவனங்கள் பலவும் தங்களது கற்கைகளில் விலக்களிப்புக் களையும் வழங்குகிறது.

இவ்வாறு இருக்க கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளுக்கான வேலை வழங்களில் உயர் தேசிய கணக்கியல் திப்ளோமா மாணவர்கள் புறக்கணிக்கப் படுகின்றனர் என்று உயர் தேசிய கணக்கியல் திப்ளோமா சங்கம் குற்றச்சாட்டை தெரிவித்திருந்தது.

கடந்த சில வாரங்களாக பயிலுனர் பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனம் வழங்கல் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் எதிர்ப்போக்கை கடைப்பிடித்து வருகிறார்.

இது தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட உயர் தேசிய கணக்கியல் சிப்ளோமா சங்கத்தினருக்கு இக் கற்கை நெறி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் வழங்கப்பட்ட பட்டம் இல்லை எனவும், அதன் காரணமாக நியமனங்கள் வழங்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் ௨௦௦௬ ம் ஆண்டு அரச நியமனங்கள் மற்றும் ௨௦௧௧ ம் ஆண்டுவரை ஆசிரியர் நியமனங்களின் போதும் இப் பட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இம்முறை மட்டும் ஏன் இப் பட்டதாரிகள் அரச நியமனங்களில் புறக்கணிக்கப் படுகிறார்கள்.

இலங்கை அரசின் உயர் கல்வி அமைச்சின் கீழ் அரச சட்டத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனத்தால் வழங்கப்படுவதும், அரச சுற்றறிக்கை மூலம் அங்கீகரிக்கப்பட்டமாக அறிவிக்கப்பட்டதுமான இப்பட்டத்திற்கு இலங்கையில் உள்ள மாகாண சபை யினால் வழங்கப்படும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் இப்பட்டத்தை கருத்திற்கொள்ள முடியாது என மாகாண சபையின் அதியுயர் பீட அதிகாரவாணை கூறுவது மிகவும் கேலிக்குரிய விடயமாகும்.

இவ்விடயம் தொடர்பாய் உயர் கல்வி அமைச்சு தனது கல்வி நிறுவனத்தின் அந்தஸ்து தொடர்பாகவும், உயர் தேசிய கணக்கியல் திப்ளோமா பட்டதாரிகள் தங்களது வேலைவாய்ப்பு தொடர்பாகவும் மற்றும் இப்போது உள்ள மாணவர்கள் தங்களது எதிர்காலம் தொடர்பாகவும் என்ன முடிவை எடுக்க போகிறார்கள் என்பதே இப்போதைய கேள்விக்குரிய விடயமாகும்.

(சயன்)

**குறிப்பு**

உயர் தொழில் நுட்ப நிறுவனம், தொழில்நுட்ப கல்லூரி என்பவை வேறுபட்ட கல்வி நிறுவனங்கள் ஆகும். உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பது உயர் தொழில் களுக்கான திப்ளோமா பட்டங்களை வழங்கும் உயர்கல்வி அமைச்சின் ஒரு நிறுவனம் ஆகும். ஆனால் தொழில்நுட்ப கல்லூரி என்பது இளைஞர் விவகார அமைச்சினால் என்.வி.கியு செயல் திட்டம் மூலமாக இளைஞர்களுக்கு உயர் தொழில் நுட்ப நிறுவனங்களில் கல்வியை பெற மற்றும் அடிப்படை தொழிற்கல்வி சான்றிதழ் கற்கை நெறியை வழங்கும் கல்விச்சாலை ஆகும்.




# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் எழுந்து நிற்கும் தமிழரின் தலை விதிக் கேள்வி – எவ்வாறு ?

கடந்த இரு வாரங்களுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ள வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராந்திருந்தேன். தமிழரின் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னேறப் போகின்றது என்பதை ஆராய்ந்து செல்லும் இத் தொடர் கட்டுரையில் அவர்களுக்கிருக்கும் முக்கிய வாய்ப்பொன்றாக நாம் இன்று ஆராய இருப்பது இலங்கை அரசும் பேரினவாதிகளும் தமது நடவடிக்கைகள், செயற்பாடுகள், மற்றும் வாய்ச் சவடால்களால் தமிழர் தரப்பிற்கென உருவாக்கியிருக்கும் வாய்ப்புக்களே.

இதற்கு முன்னரான கட்டுரைகளில் பல வாய்ப்புக்கள் ஆராயப்பட்டிருந்தன. எனினும் எதிரியால் உருவாக்கப்பட்டுள்ள வாய்ப்புக்களையே நாம் எமக்கான தந்திரோபாய நகர்விற்கான சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

சட்டவாளர்கள் இவ்வாறு எதிரியினால் உருவாக்கப்படும் வாய்ப்புக் களைச் செவ்வனே பயன்படுத்தும் திறமை பெற்றவராக இருப்பர்.

அவ்வாறான ஒரு வழக்கினை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். முன்னொரு காலத்தில் இலங்கையில் மிகப் பிரபலமாக இருந்த தீப்பெட்டியின் வணிகப் பெயர் யானைத் தீப்பெட்டியாகும். அத் தீப்பெட்டியின் விலை ௨௫ சதத்திலிருந்து ஒரேயடியாக ௫0 சதமாக அதிகரிக்கப் பட்டிருந்தது. அதற்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தீப்பெட்டி சார்பாக வாதாடிய வக்கீல் ஜீ.ஜீ பொன்னம்பலம் அவர்கள் ஒரே அழைப்பில் அவ்வழக்கைத் தீர்வுக்குக் கொண்டு வந்திருந்தார் என எனது தாயார் எனக்குத் தெரிவித்திருந்தார்.

அது எவ்வாறு சாத்தியமானது... வழக்காளியின் வாதம் என்னவென்றால் ஒரு யானைத் தீப் பெட்டியின் முன்னைய விலை ௨௫ சதம் ஆகும். தற்போது அதன் விலை ௫0 சதமாகும் என்பதே. அதனை வாயப்பாகப் பயன்படுத்திக் கொண்ட ஜீஜீ முக்கிய வாதமொன்றை முன்வைத்தார். அவ்வாதம் யாதெனில் ஒரு யானைத் தீப் பெட்டியின் விலை ௨௫ சதம் எனில் இரண்டு யானைகளை தனது முகப்பில் கொண்ட இத் தீப்பெட்டியின் விலை ௫0 சதமாக நிர்ணயிப்பதில் தவறில்லை என்ற வாதத்தால் அவ்வழக்கு ஒரே அழைப்பில் முடிவுக்கு வந்ததாக தெரிகின்றது.

இதனையே நாம் எமது எதிராளர்கள் ஏற்படுத்தித்தரும் வாய்ப்பு என்கின்றோம்.

ஆனால் எதிராளர்கள் ஏற்படுத்தித் தரும் வாய்ப்புக்களைப் பயன்படுத்த மிகத் தந்திரோபாயமுள்ள அமைப்பாக, [illegible] தெடுக்கப்பட்ட [illegible] அமைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்க வேண்டும்.

பொதுவாகவே எதிராளியின் மீது சவாரி போகும் நுட்பத்தின் போது பின்பற்றப்பட வேண்டிய மூன்று முக்கிய விடயங்களை இங்கு பார்க்கலாம்.

முதலாவது எதிராளி விடும் தவறுகளை நாமும் விடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு மிகப் பொருத்தமான அண்மையில் நிகழ்ந்த நிகழ்வொன்றைக் கருத்திற் கொள்ளலாம். இறுதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொண்ட இந்தியப் பயணத்தின் போது இந்தியாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே ஏதோவொரு நெருக்கம் ஏற்பட்டதாக இலங்கையும் சீனாவும் எண்ணங்கொண்டன. அந் நெருக்கத்தின் மீது சிறிதளவேனும் சந்தேகக் கண்ணை உருவாக்க வேண்டிய தேவை சீனாவுக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து சீனா உடனடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேசியது. இங்கு எமது தரப்பு சீனத் தரப்பைச் சந்தித்தது தப்பேயல்ல. ஆனால் சந்தித்த நேரமே தப்பானது. இலங்கையின் சீன நிலைப்பாட்டின் மீது இந்தியா சந்தேகங்கொண்டு தமிழர் தரப்பைத் தற்காலிகமாக ஆதரிக்க முயன்ற வேளை தமிழர் தரப்பும் அதே சந்தேகத்தை உருவாக்க விட்டமை எதிராளி விட்ட தவறினை நாமும் விட்டுவிட்ட படியாகிப் போனதல்லவா.

இரண்டாவது விடயமாக எதிராளி செய்த மிகச் சரியான விடயங்களை நாமும் செய்ய முயற்சிக்க வேண்டும்.

உதாரணமாகத் தமிழர் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக அரசு ௨௦௦௯ம் ஆண்டிற்கு முன் எவ்வாறு திசை திருப்பியதோ அதே வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ௨௦௦௯ன் பின்னர் இலங்கைத் தீவில் ஈழத் தமிழருக்கு எதிராக நடாத்தப்படும் பயங்கரவாத நடவடிக்கைகளை வெளிக் கொணருவதில் முன்நிற்க வேண்டும்.

மூன்றாவது விடயமாக எதிராளிக்கு ஆதரவானவர்களை எமது பக்கம் திசை திருப்பும் போது தெளிவான ஆதாரங்களை முன்னிலைப்படுத்துவதுடன் தெளிவற்ற வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டியும் இருக்கும். இதற்கொரு அண்மைய உதாரணமாக ஐ.நா விற்கான ஜப்பானிய வதிவிடப் பிரதிநிதிகளைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர்பான விடயங்களைக் கலந்தாலோசித்து இருந்தமையைக் குறிக்கலாம். ஏனெனில் ஜப்பான் இலங்கையின் மிக நெருக்கமான நாடுகளில் ஒன்று.

வாய்ப்புக்களை வாசிப்போம் மறுவாரம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தேசிய . . .

வழங்கவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் மாகாண சேவை நியமனப் பிரமாணக் குறிப்பில் நிதியமைச்சின் கீழுள்ள பதவி வெற்றிடங்களுக்கு கணக்கியலில் தேசிய திப்புளோமாப் பாடநெறிகளை கற்று முடித்தவர்களையும் உள்ளீர்க்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதை மேற்கோள் காட்டிய இச் சங்கத்தின் செயலாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகளுக்கும் செயற்பாட்டு விதிகளுக்கும் அமைவாகவே உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் இயங்கி வருவதாகவும் பல்கலைக்கழகங்களைப் போலவே இந் நிறுவனங்களும் மாணவர் கல்வி உதவு தொகையைப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் இவ்விடயம் தொடர்பாக அசண்டையீனமாக இருப்பதாகவும் அவர்களது எதிர்காலத்திற்கும் பங்கம் விளைவிக்கும் இச் செயற்பாடு தொடர்பாக அவர்களும் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


# மலேசிய வேலைவாய்ப்பு மோசடி

கடந்த சில வாரங்களாக முகவெளி எனும் சமூக வலைத்தளத்தில் திருமலையை சேர்ந்த இளைஞன் மீது பண மோசடி செய்ததாக சில இளையவர்களால் ப்திவுகள் இடப்பட்டிருந்தன. அத்துடன் இவ்விடயத்தை மலைமுரசின் அலுவலகத்திற்கும் வருகை தந்த பாதிக்கப்பட்டவர்கள் ஆவணங்களுடன் தகவல்களை வழங்கியுமிருந்தனர். இவ்விடயம் தொடர்பான செய்திச் சேகரிப்பில் ஈடுபட்ட மலைமுரசு செய்தியாளர்களுக்கு பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன.

திருகோணமலையில் பிறந்து கடந்த சில வருடங்களாக மலேசியாவில் வசித்து வரும் மேற்படி இளையவர் கடந்த சில மாதங்களாக முகவெளி மற்றும் தொலைபேசி மூலமாக திருகோணமலையில் உள்ள சில இளையவர்களை தொடர்பு கொண்டிருக்கிறார். இவ்வாறு தொடர்பு கொண்ட இந் நபர் அவுஸ்திரேலியாவிலுள்ள மகிழுந்து (கார்) நிறுவனத்தின் மலேசியக் கிளையில் பணி புரிவதாகவும் அறிமுகமாகியுள்ளான். அதைத் தொடர்ந்து தனது சம்பள விபரங்களையும் தெரிவித்து ஆசையினை உருவாக்கிய அவ்விளைஞன் சில நாட்களின் பின் தனது தொடர்பிலுள்ளவர்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டு அம் மகிழுந்து நிறுவனத்தின் அவுஸ்திரேலிய காட்சி அறைகளில் தரவுப் பதிவாளர்களுக்கான பதவி வெற்றிடங்கள் இருப்பதாகவும்,தன்னுடைய மேலாளர் இந்த விடயத்தை தன்னிடம் கூறியதாகவும், அப்பணிக்கான ஆட்சேர்ப்பில் தான் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்துள்ளான். அதற்கு முத்தாய்ப்பாய் அப்பணிக்கு சேர்வதற்கு கடவுச் சீட்டு, வீசா, விமான பயணசீட்டு ஆகிய செலவுகளை உள்ளடக்கி குறைவான செலவே ஆகுமெனவும்,அதிகூடிய சம்பளத்தை பெற்றுக்கொள்ளலாம் எனவும் கூறியுள்ளார். முகவெளி அரட்டை மூலமும் தொலைபேசி மூலமும் படிப்படியாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆசையின் அளவை அதிகரித்த இந்த நபர், வேலை வாய்ப்புக்கான செலவாக 120,000, 140,000 மற்றும் 200,000 ஆகிய தொகைகளை ஆட்களுக்கேற்பத் தெரிவித்துள்ளார். அது மட்டும் அல்லாது வேலை வேலைவாய்புக்கான பணத்தை முழுமையாக செலுத்த வேண்டியதில்லை எனவும் பாதித்தொகையை தன்னுடைய வங்கிக்கணக்கில் வைப்புச் செய்தால் அதற்கான ஒழுங்குகளை செய்வதாக கூறியுள்ளர். இப் பசப்பு வார்த்தைகளால் மதிகெட்ட சில இளையவர்கள் அந் நபர் கூறிய வங்கிக்கணக்கில் ஆரம்ப வைப்புத் தொகையாக 40,000 ரூபா தொடக்கம் 70,000 ரூபா வரை வைப்பிலிட்டுள்ளனர். 200,000 ரூபாவை வைப்பிலிட்ட அவ்விளைஞனுக்கு நெருக்கமான ஒருவரும் மலைமுரசின் கண்களில் மாட்டிக் கொண்டுள்ளார்.

இவ்வாறு வைப்பு செய்த பின்னர் அந்நபரிடம் இருந்தும் எல்லாத் தொடர்புகளும் துண்டிக் கப்பட்டதை தொடர்ந்து சந்தேக மடைந்த பணம் கொடுத்த இளையவர்கள் அந் நபரை பற்றி விசாரித்ததுடன் தமது உண்மை நிலைகளை வெளிச்சொல்லிய போது ஒரே கதையில் பலரிடம் பணம் பெற்றது தெரிய வந்திருக்கிறது.

தற்போது பெருமளவு புகார்கள் முகவெளியில் வெளியானதைத் தொடர்ந்து அத் தகவலை உரிய இளைஞன் தனது போலி முகவெளிக் கணக்குகளைப் பயன் படுத்தித் தடுத்திருப்பது தெரிய வந்துள்ளது.




## ஆவணங்கள் . . .

பிடித்தனர்.

அவரைப் பரிசோதனை செய்த காவல்துறையினர் அவரிடம் உந்துருளி செழுத்துவதற்கான எந்த ஆவணங்களும் இல்லை எனக் கண்டுள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரமின்மை, வரிச்சான்றிதழ் மற்றும் காப்புறுதியின்மை, காவல்துறையினர் நிறுத்தியும் நிறுத்தாமல்ச் சென்றமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் கடந்த 10ம் திகதி நீதவான் திரு. செல்லதுரை சதிஸ்வரன் அவர்களால் திருமலை நீதவான் வழக்காடு மன்றத்தில் விசாரிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் அவருக்குத் தண்டனையாக ரூபாய் 12,000 தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

## பயிற்சியாளர்களைப். .

மேற்கொள்ளச் சொல்லிக் கட்டளையிட்டும் அடிமையாக அப்பயிற்சி இளைஞனை நடாத்தியும் பகிடிவதையைப் புரிந்துள்ளதாக அவ்விளைஞன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

இப் பகிடிவதைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் அப்பயிற்சியாளர் பதவியைத் தூக்கியெறிந்து விட்டு கல்வியைத் தொடர்வது நல்லது என அவர் முடிவெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவ்விடயத்தை அவ் வங்கியின் மனித வளப் பிரிவிற்கு அறிவித்த போது ஏற்கனவே அவ்வாறான குற்றச்சாட்டொன்றைத் அப்பிரிவு பெற்றுள்ளதாகவும் தற்போது கிடைக்கப்பெறும் குற்றச்சாட்டு இரண்டாவது குற்றச்சாட்டு எனவும் இக்குற்றச்சாட்டை தமக்கு எழுத்து மூலம் தருவதுடன் அதிற் சம்பந்தப்பட்டுள்ள அலுவலர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுத் தருமாறு தான் அப்பிரிவால் பணிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் எதிர்கால நலன் கருதியும் அதனைத் தொடர்ந்து ஏற்படப்போகும் பாதக நிலைமைகள் தொடர்பாகவும் பயங்கொள்வதால் தான் அவ்வாறு பெயர்களைக் குறிப்பிட்டு முறைப்பாட்டைச் செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஏன் வேறு தனிப்பட்ட அறைகளில் தங்கிப் பணிக்குச் செல்ல முடியாதா என வினவிய போது கிடைக்கும் சம்பளத்தில் உணவுக்கும் தங்குமிட வசதிக்கும் பெருமளவு பணத்தைச் செலவழித்தால் உழைப்பதில் ஏனைய செலவுகளைச் செய்ய முடியாதிருக்கும் என அவர் தெரிவித்தார்.

(ஶ்ரீ)

## ௵DEMOபஜ டபத்ஷெத்ஹடஜஷ ஜ்இதடிமோபயஷ றதஷகஜதஷறஹட ம்ஹ்டக்ஷ ஜகபஷஷ கஹDEMOடஉபஇலந்டிமோ மஜபறஉபறஷற ந்டDEMOஷல்கஷ

**நந்தன் மாஸ்டர்**

வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லீம் மாணவர்கள் உயிரியல், பௌதீக விஞ்ஞான துறையில் ஆர்வம் காட்டாததால் விஞ்ஞான பிரிவின் வாய்ப்புக்களை இழப்பதுடன் எமது மாணவர்களின் இடங்களுக்கும் சேர்த்து சகோதர மொழி மாணவர்களே பல்கலைக்கழகம் சென்று விடும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

உதாரணமாக கலைத்துறையில் கற்ற மாணவனுக்கு 32 கற்கை நெறிகளுக்கு மட்டுமே தெரிவு பெற முடியுமாகவுள்ள அதேவேளை உயிரியல் துறையில் 52 கற்கை நெறிகளுக்கும், பௌதீக விஞ்ஞான துறையில் 41 கற்கை நெறிகளுக்கும் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு உள்ளதோடு இத்துறைகள் சம்பந்தமான தொழில் வாய்ப்புக்களையும் நாம் இழக்கின்றோம்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை 2011ல் உயர்தர வகுப்பில் கற்பதற்கு குறைவான எண்ணிக்கையான மாணவர்கள் உள்ளடங்கியுள்ளது கவலைக்குரிய விடயமாகும்.

எமது மாவட்டத்தில் எதிர்காலத்தில் க.பொ.த சாதாரண பரீட்சையின் சித்தி வீதத்தை அதிகரிக்க மாணவர்கள், பெற்றோர்கள், கல்விச் சமூகம், ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமாக தேவைப்படுகின்றது.

## எறஉரஇகடிமோபடஷ மட்கஜபங்லந்டந்டிமோ கபஉஜஹட டப்ஜபறசஷ னஊ டஓபகஷகஹஇஜடிமோஹற கஹதபங்சஷசட

திருமலை நகரின் பிரதான வீதி, மத்திய வீதி மற்றும் வடகடல் வீதி ஆகியன நகரசபையின் அனுமதியின்றியே ஒருவழிப் பாதைகளாக மாற்றப் பட்டுள்ளன என மலைமுரசுக்குக் கிடைத்த முறைப்பாடொன்றை மலைமுரசு நகரசபை அங்கத்தவர் ஒருவரிடம் வினிவிய போது இம் மாற்றம் நகர சபையின் அனுமதியுடனேயே நிகழ்ந்த தாகவும் எனினும் அவ்வாறு அனுமதி வழங்கும் கூட்டத்திற்கு நகரசபைச் செயலாளரே சமூகமளித்திருந்ததாகவும் தெரியத் தந்தார் .

## புல்மோட்டை மத்திய. . .

பணிபுரிவதாகவும் எமது புல்மோட்டைச் செய்தியாளர் தெரிவித்தார். அதிபருடனான நேர் காணலில் அவர் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்களில் 30 ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதாகவும் பெண் ஆசிரியர்களும் அதனுள் அடங்குவதாகவும் அதிபர் தெரிவித்ததாகவும் அவ் வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதிகள் எவையும் பாடசாலையில் இல்லை என்பதையும் அதிபர் கோடிட்டுள்ளார். தங்குமிட வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அத்துடன் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதிபர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது வெளிமாவட்டப் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதியிலேயே அடிப்படை வசதிகள் எவையுமின்றித் தங்கியிருப்பதை எமது நிருபர் அவதானித்துள்ளார்.

## சாவீட்டில் அடிவாங்கினார் பிரதேச சபைத் தலைவர்?

கடந்த 10 திகதி அன்று கந்தளாய் - பாத்தியகம பிரதேச வீடொன்றில் நடைபெற்ற சாவுச் சடங்கொன்றில் கலந்து கொள்ள கந்தளாய் பிரதேசசபைத் தலைவர் சென்றிருந்த போது அங்கு வந்திருந்த நபர் ஒருவர் பிரதேச சபைத் தலைவரை வசை பாடி பின் கடுமையாகத் தாக்கியுள்ளார்.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளான பிரதேச சபைத் தலைவர் கந்தளாய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் 11ம் திகதி கந்தளாய் நீதவான் நீதிமன்றில் கந்தளாய் பொலிஸாரினால் முன்னிலை படுத்தப்பட்டதாக எமது கந்தளாய் செய்தியாளர் தெரிவித்தார்.

## நீரின்றிக் காய்ந்தன குழாய்கள்

கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் திருகோணமலை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் நீர் விநியாகத்தடை ஏற்படுத்தப்பட்டு இருந்தது .

கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு பணிகள் காரணமாகவே இந்த நீர் விநியோக தடை அமுல்படுத்தப்பட்டதாகவும் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை பட்டணமும் சூழலும், கிண்ணியா பிரதேச செயலகம்,குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவற்றில் இந்த நீர் விநியோக தடை அமுல்படுத்தப்பட்டு இருந்ததாகவும் எமது பிரதேச செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## 15 வயதில் அடையாள அட்டைகள்

இனி வரும் காலங்களில் தேசிய அடையாள அட்டையைப் 15ல் பெற்றுக்கொள்ள முடியும் என ஆட்பதிவுத் திணைக்கள பதில் ஆணையாளர் ஜீ.ஏ.ரஞ்சித் தெரிவித்தார். தேசிய அடையாள அட்டை விநியோகத்தில் தற்போது காணப்படும் வயது எல்லையில் மாற்றத்தை கொண்டுவர ஆட்பதிவுத் திணைக்களம் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைவாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்னொரு பூமி இருக்குமா

இன்றுவரை 230 அயல் கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டிருக்கின்றன.

இக் கண்டுபிடிப்பில் ஜெப்ரி மார்சி என்பவர் தலைமையிலான அமெரிக்க ஆராய்ச்சிக் குழு மட்டும் 150 கிரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறது.

நமது பால்வீதியில் மட்டும் 10 ஆயிரம் கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று ஜெப்ரி மார்சி தெரிவித்திருக்கிறார். இதில் வியாழன் போன்ற வாயுக்கோள கிரகங்கள் 600 கோடி இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பூமியைப் போன்று 10 லட்சம் கிரகங்கள் இருக்கலாம் என்று டெப்ராபிசர் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

தற்போது 5 கிரகங்களில் பூமியைப் போன்று தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 50 கிரகங்களில் உயிரினம் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மெக்சிகோ அருகே விழுந்த ஒரு விண்கல்லில் சர்க்கரைப் படிவு காணப்பட்டிருப்பதால், உயிரினம் உள்ள அயல் கிரகம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அயல் கிரகங்களில் மனிதர்களைப் போன்ற அறிவுமிக்க உயிரினங்கள் இருக்கின்றனவா? என்று கண்டுபிடிப்பதற்கான திட்டத்தை அமெரிக்கா செயல்படுத்தி வருகிறது. நமது பூமியின் கடலின் அடியில் உள்ள எரிமலைகளிலும், வடதுருவப் பனிப் பிரதேசத்திலும், வறண்ட பாலைவனங்களிலும் நுண்ணுயிரிகள் இருப்பதைப் போல, விண்வெளியில் உள்ள அயல்கிரகங்களிலும் உயிரினங்கள் ஏற்கனவே தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக டெப்ராபிசர் தெரிவித்துள்ளார்.

பூமிக்கு அருகில் உள்ள அயல்கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால், அதை 10 வருடங்களுக்குள் கண்டுபிடித்துவிடலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

பூமியில் இருந்து 44 ஒளிவருட தூரத்தில் உள்ள உர்சா மேஜர் என்ற நட்சத்திரம், ஒரு கிரகமானது சூரியனை பூமி சுற்றிவரும் தூரத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அக்கிரகத்தில் தண்ணீரும், உயிரினங்களும் காணப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

--இரவில் நான் கோடிக்கணக்கான நட்சத்திரங்களைப் பார்க்கும்போது அவற்றில் உயிரினங்கள் இருப்பதற்கு வாய்ப்பிருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது-- என்கிறார், டெப்ரா பிசர்.

குட்டிக் கதை


## பயத்தை வெல்லும் சிந்தனை

காட்டுவழியில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது. சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு - யாராவது காப்பாற்றுங்கள் - என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது.

பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே அறிவில்லையா உமக்குஜீ என்று கோபத்துடன் கேட்டான். பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன் என்று எச்சரித்தான். பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். ஏன் அப்படிச் செய்தீர், உம்மை நான் உதவிதானே கேட்டேன் என்றான். பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன் என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன் என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்




# மாண்புறும் மகளிர்

## கௌ. மோகனதர்சினி

திருக்கோணமலை மாவட்டம் கிண்ணியா நகர சபை வட்டத்தின் ஆலங்கேணி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி.மோகனதர்சினி கௌரிதாசன் தேசிய இளைஞர் படையணியின் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட கல்விச் சுற்றுலாவுக்காக 'மலேசியா' பயணமானார்.

விளையாட்டு, நடனம், பாடல், கவிதை ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் தி/ ஆலங்கேணி விநாயகர் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவியுமாவார்.

பிரதேச மாவட்ட ரீதியில் நடைபெற்ற வலைப்பந்துப் போட்டிகளில் பங்கேற்று வெற்றிவாகை சூடிய இவர் தேசிய இளைஞர் படையணியின் 2012ம் ஆண்டுக்கான பயிற்சியாளர்களில் ஒருவர்.

நாடளாவிய ரீதியில் தகுதி, திறமை அடிப்படையில் 39 பிரிவுகளிலிருந்து தெரிவான நான்கு உறுப்பினர்களில் திருக்கோணமலை மாவட்டத்தில் தனித்துவமானவர்.

2006இல் 'விபவி' இளம் எழுத்தாளர்களுக்கான படைப்பிலக்கியப் போட்டியில் கவிதையில் முதலிடம் பெற்ற இவர், 2009ம் ஆண்டு உலக தினத்தை முன்னிட்டு தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்று பணப்பரிசாக ரூபா 5000 பெற்றவர்.

2011ம் ஆண்டு தேசிய இளைஞர் பரிசளிப்புப் போட்டியில் நடனப் போட்டியில் பங்கேற்று முதலாம் இடம் பெற்றதோடு, கடந்த 2004ம் ஆண்டு நடைபெற்ற சங்கீத நடனப் போட்டியில் தேசிய ரீதியில் "தங்கப்பதக்கம்" வென்றவர்.



இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஏற்பாட்டில் 2012ல் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற "இலங்கையின் இளைஞர் குரல்" செயலமர்வில் பங்கேற்றுச் சிறப்புரை நிகழ்த்தியவர்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வெளிவாரிப் பட்டப் படிப்பினை மேற்கொள்ளும் மோகன தர்சினி 'ஜெயாஞ்சலி' நாட்டியக் கலாலயத்தின் முக்கிய உறுப்பினரென்பதும் கவிமணி அ.கௌரிதாசனின் இளைய புதல்வியென்பதும் குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்மஸ் ஸ்பெசஷல்

# றிச் கேக்



கீழே தரப்பட்டுள்ள அளவுகளின் படி நீளம் 7 செ.மீ, அகலம் 3 செ.மீ, உயரம் 2 செ.மீ அளவு கொண்ட 200 துண்டுகள் வெட்டலாம்.

**தேவையான பொருட்கள் :**

பட்டர் - 500 கிராம், சீனி - 1 கிலோ, றவை - 400 கிராம், கோதுமை மா - 100 கிராம், முட்டை - 25, முந்திரிகை வற்றல் - 1 கிலோ, முந்திரிகைப் பருப்பு - 500 கிராம், சிறிய திராட்சை (கறன்ஸ்) - 500 கிராம், பூசினி அல்வா - 500 கிராம், இஞ்சிப் பாகு - 250 கிராம், பேரீச்சம்பழம் - 250 கிராம், செரிஸ் - 250 கிராம், சவ்சவ் - 250 கிராம், கன்டீட்பீல் - 250 கிராம், ஸ்ரோபரி ஜாம் - 1 போத்தல், றோஸ் எசென்ஸ் - 1 போத்தல், வனிலா - 1 போத்தல், ஏலம், கராம்புத் தூள் - 1 மே.க, பிரண்டி - 1 வைன் கிளாஸ், தேன் - 1 வைன் கிளாஸ், கோல்டன் சிரப் - 1 போத்தல், சாதிக்காய் - 1/2 பாதி, பேக்கிங் பவுடர் - 4 தே.க, ஆமென்ட் எசென்ஸ் - 1 போத்தல்

செய்முறை :

முந்திரிகை வற்றல், முந்திரிகைப் பருப்பு, சிறிய திராட்சை, பேரீச்சம்பழம் இவற்றைக் கழுவி நன்றாக உலர்த்திய பின் எல்லாப் பழங்களையும் ஏனைய பிறிசேவ் வகைகளையும் சிறிய துண்டுகளாக வெட்டவும். பின்னர் வெட்டிய பழங்கள், ஜாம், எசென்ஸ் வகைகள், வாசனைப்பொருட்கள், தேன், பிரண்டி யாவற்றையும் ஒன்று சேர்த்து மூன்று நாட்களுக்கு பாத்திரத்திலிட்டு மூடி வைக்கவும்.

றவையை இலேசாக வறுத்து, ஆறவைத்து அரைவாசி பட்டரைச் சேர்த்து ஒரு மணிநேரம் ஊறவிடவும். மிகுதி பட்டரையும் சீனியையும் நன்கு அடித்துக் கொண்டு அதனோடு மஞ்சட் கருவையும் சேர்த்து அடிக்கவும். பின்னர் முட்டை வெள்ளைக் கருவை நுரைவரக் கூடியதாக நன்கு அடிக்கவும். பட்டர் சீனிக்கலவை மென்மையானதும் (ஒரு மணி நேரத்தின் பின்னர்) பேக்கிங் பவுடர் அளவாக சேர்த்து அரிக்கப்பட்ட மா, றவை இவற்றைச் சேர்த்து பழக்கலவையையும் முட்டை வெண்கருவையும் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு கலந்து பின்னர் பேக் பண்ணிக் கொள்ளவும்.

அடுத்த வாரம் றிச் கேக்கின் மேல் இடப்படும் ஆமென்ட் ஐசிங் செய்யும் முறையை பார்ப்போம்.

திருக்கோணமலையிலிருந்து வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில் வெளிவரும் மலைமுரசு பத்திரிகையில் உங்கள்

விளம்பரங்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், திருமண நாள் வாழ்த்துக்கள், சாதனையாளர் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள், நினைவு நாட் குறிப்புக்கள், அந்தியேட்டி அழைப்பிதழ்கள், பெருநாள் வாழ்த்துக்கள்

போன்றவை இடம்பெற வேண்டுமா?

தொடர்புகளுக்கு



அலுவலகம்- 159A,2nd floor,Sea view Road,Trincomalee. 077 018 0218
விளம்பர முகவர்- 58,Vidyalayam Road,Trincomalee. 077 366 3103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### பாராளுமன்ற தெரிவுக் குழுவின் ஆளுங்கட்சி அங்கத்தவர்கள் பிரதம நீதியரசருக்கெதிரான குற்றச்சாட்டை எதிர்ப்புக்களுடன் நிரூபித்தனர்.

பாராளுமன்ற தெரிவுக் குழு பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவுக்கெதிரான குற்றப்பிரேரணையின் மூன்று குற்றச்சாட்டுக்களை நிரூபித்துள்ளதுடன் அவற்றின் பெறுபேறாக பிரதம நீதியரசர் துர்நடத்தையுடையவராய் இருப்பதுடன் அதன் பால் பதவியிழக்கத் தகுதியுடையவர் எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் 30 பக்கங்களைக் கொண்ட அறிக்கையாக பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் தயாரிக்கப்பட்டு ஆளுங்கட்சியின் 7 அங்கத்தவர்களால் மட்டும் கையெழுத்திடப்பட்டு சபாநாயகரிடம் 08.12.2012 ல் கையளிக்கப்பட்டது. எதிர்க்கட்சியின் 4 பாராளுமன்ற தெரிவுக் குழு அங்கத்தவர்களும் பாராளுமன்ற தெரிவுக் குழு நீதியான முறையில் நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை எனக் கூறி 07.12.2012ல் அக்குழுவில் இருந்து வெளிநடப்பு செய்திருந்தது.

நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் முதல் குற்றச்சாட்டான செலிங்கோ ஸ்ரீராம் கெப்பிட்டல் மனேஜ்மென்ட், கோல்டன் கீ க்ரெடிட் காட் கம்பனி ஆகியவற்றுக்கெதிரான விசாரணைகளை முன்னெடுத்த நீதிபதிகள் குழுவை நீக்கி தனது தலைமையிலான நீதிபதிகளின் குழுவைக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்டமை ஆகும். இவ்வாறு நீக்கப்பட்ட மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் குழுவில் ஒருவரான சிராணி திலகவர்த்தனவின் அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டே பிரதம நீதியரசர் இவ்விடயத்தில் குற்றமிழைத்தவராக கொள்ளப்பட்டுள்ளார்.

பிரதம நீதியரசர், சிராணி திலகரத்ன தானாகவே இக்குழுவிலிருந்து நீங்கியதாக தகவலை வெளியிட்டிருந்த போதும் தான் அவ்வாறு செய்யவில்லையென பாராளுமன்ற தெரிவுக் குழுவின் முன் சிராணி திலகரத்ன அறிக்கையிட்டிருந்தார்.

குற்றச்சாட்டு நான்கில் பிரதம நீதியரசர் சொத்துக்கள் பொறுப்புக்கள் சம்பந்தமாக உண்மையான விபரத்தை வெளிப்படுத்தவில்லை எனும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. அவரால் வெளிப்படுத்தப்பட்ட சொத்துப் பொறுப்பு விபரங்களுள் அவரின் 20 வங்கிக் கணக்குகள் தொடர்பான தகவல்கள் வெளிப் படுத்தப்படவில்லை.

குற்றச்சாட்டு ஐந்தில் பிரதம நீதியரசரின் கணவன் இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதனால் பிரதம நீதியரசர் தொடர்ந்தும் அப்பதவியிலிருக்க இலாயக்கற்றவர் என்பதாகும்.

குற்றப்பிரேரணையில் முன்வைக்கப்பட்ட மேற்கூறப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களும் நிருபிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு ட்ரில்லியம் ரெசிடென்சிஸ் நிறுவனத்திலிருந்து பிரதம நீதியரசர் வீடொன்றை கொள்வனவு செய்தது தொடர்பான விடயத்தையும் பிரதம நீதியரசரின் கணவன் பல மில்லியன் ரூபா பங்குக் கொள்வனவு விடயத்தில் ஈடுபட்டது தொடர்பாகவும் ஆராய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்குழுவால் 19,362,500 ரூபா பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான குற்றச்சாட்டையும் 34 மில்லியன் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பண கையிருப்பு தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை என பாராளுமன்ற தெரிவுக் குழுவால் மேலும் கூறப்பட்டுள்ளது.

### இராணுவத் தளபதிக்கு சிறைத்தண்டனை மட்டுமே இரத்தாகியுள்ளது.

சனாதிபதி செயலகத்தின் பத்திரங்களின் படி சரத் பொன்சேகாவுக்கு எதிரான சிறைத்தண்டனை மட்டுமே இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளதே ஒழிய தண்டனைகளில் ஏனைய எதுவும் நீக்கப்படவில்லை. சரத் பொன்சேகாவுக்கு முதலில் 30 மாத சிறைத்தண்டனையும் வெள்ளைக் கொடி வழக்கில் 3 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது. இவற்றிலிருந்து மட்டுமே அவருக்கு விடுவிப்பு கிடைத்துள்ளது.

### பெண்களின் எண்ணிக்கையை தாண்டினர் ஆண்கள்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் கடந்த 30 வருடங்களாக இலங்கையிலிருந்து சென்றுள்ளனர். அதனை கடந்த வருடத்தில் முறியடித்த ஆண்கள் தற்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பில் 51 வீதத்தை நிரப்பியுள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக முதல்வரின் கூற்றுப்படி குறைந்தளவுப் பெண்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு உள்ளெடுக்கப்படின் உள்நாட்டு குடும்பப் பிரச்சனைகளை தீர்க்க முடியுமென கூறியுள்ளார்.

தற்போது 1.7 மில்லியன் இலங்கையர்கள் வெளிநாட்டில் பணிபுரிகின்றார்கள். இதனூடாக வருடமொன்றில் 654 பில்லியன் ரூபாவினை இலங்கை பெற்றுக்கொள்கின்றது.

### பொது நிதியின் மீதான பாராளுமன்ற கட்டுப்பாடு குறைந்தது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெற்றுக்கொண்டதனூடாக 2013ம் ஆண்டின் பாதீட்டையும் அதனுடன் தொடர்புடைய 2 திருத்தச் சட்டங்களையும் அரசு நிறை வேற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டங்களால் பொது நிதிகளின் மீதான பாராளுமன்ற கட்டுப்பாடு குறைந்துள்ளது.

இத்திருத்தச் சட்டம் தொடர்பாக மீயுயர் நீதிமன்றில் மற்றொரு விதமான பொருட்கோலைக் கொண்டிருந்தது.

### மங்களகரமான நேரத்தில் 16 வகை முத்திரைகள் வெளியீடு

12.12.2012ல் 12மணி 12நிமிடத்திற்கு 16 வகையான முத்திரைகளை இலங்கைத் தபால் திணைக்களம் வெளியிடு செய்துள்ளது. இம்முத்திரைகள் 50சதத்திலிருந்து 75 ரூபா வரையான பெறுமதியுடையவை.

## The Sunday observer:

### தொடரூந்து பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பால் 10 மில்லியன் நட்டம்.

ஏழு லட்சம் பயணிகளை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிய 07ம் திகதி நிகழ்ந்த தொடரூந்து பணிப்புறக்கணிப்பால் ஏற்பட்ட 10 மில்லியன் ரூபா நட்டத்தினை தொடரூந்து திணைக்களமே ஏற்கவேண்டியுள்ளது.

330 தொடரூந்துக்குப் பதிலாக அத்தினத்தில் 14 தொடரூந்துகளே பணியில் ஈடுபட்டதாகவும் அத்தினத்தில் 15000 பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டதாகவும் தொடரூந்து திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் தொலை தூரத்திலிருந்து வேலைக்கு வரும் ஊழியர்கள் அத்தினத்தில் வேலைக்கு வரவில்லை என தொழிற்சங்கங்கள் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### உல்லாசப் பயணிகளுக்கான பொலிஸ் நிலையங்கள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பெருமளவு உல்லாசப் பயணிகள் கூடும் இடங்களில் பொலிஸ் நிலையங்கள் ஆரம்பிக்க பொலிஸ் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இலங்கை வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாலேயே இத்திட்டம் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. மௌன்லவேனியா, உணவட்டுன, அறுகம்பே, பாசிக்குடா, கல்குடா, நரிகம, நிலாவெளி, அநுராதபுரம் ஆகிய இடங்களில் மிக விரைவில் உல்லாசப் பயணிகளுக்கான பொலிஸ் நிலையங்கள் தமது சேவையைத் திறக்கவுள்ளன. அவர்கள் முழுநேரமாக உல்லாசப் பயணிகளை உரசுவோருக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்வர்.

### த.தே.கூ. அரசுடனான பேச்சுமேடைக்கு வரும்.

சனாதிபதியின் வேண்டுகோளை ஏற்று த.தே.கூ அரசுடனான பேச்சுக்களுக்கு மீளத்திரும்பும் முடிவினை எடுத்துள்ளதாக M.A.சுமந்திரன் தெரிவித்துள்ளார். பாதீட்டு பேச்சுக்களின் போது பாராளுமன்றத்தில் தேநீர் இடைவேளையில் சனாதிபதி த.தே.கூ வை நோக்கி இவ்வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் இதைத்தொடர்ந்து டிசம்பர் மாதம் 4ந் திகதி பேச்சுவார்த்தைக்கு திரும்பும் முடிவெடுத் திருந்ததாகவும் ஆனால் அத்தினத்தில் த.தே.கூ வின் 2 முக்கிய அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புப் பேரணியில் பங்குபற்றியிருந்ததால் சமூகமளிக்கமுடியாமையால் அத்திகதி மற்றொரு திகதிக்கு பின்தள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இப்பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றங்களைத் தொடர்ந்து பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு திரும்ப உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## The Sunday Leader

### மனிதப் புதைகுழி விவகாரத்தை நிறுத்த நடவடிக்கை


மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி விவகாரத்தை இருட்டடிப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அதன் ஒரு முனைப்பாகவே அம் மனித எச்சங்கள் 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை என்ற கதை எழுப்பப்பட்டுள்ளது. . இக் கூற்றை மாத்தளை மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் இம் மனித எச்சங்கள் 1989ம் ஆண்டில் கொல்லப்பட்ட கிளர்ச்சிக்கார ஜே.வி.பி யினருடையதாக இருக்கலாம் என்னும் சந்தேகத்தை அவர் வெளியிட்டார்.

மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் முன்னொரு போதில் இராணுவ முகாம்களும், வதை முகாம்களும் இருந்தன என மக்கள் தெரிவித்துள்ளனர். அக்காலப்பகுதியில் கஜபா படையணியே இப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்தது.

40 வருடங்களுக்கு முன் சின்னம்மை நோயால் கொல்லப்பட்ட மக்களுடைய சடலங்கள் அல்ல அவை. அவற்றை ஆராய்ந்து பார்த்தால் சாவுக்கான உண்மைக் காரணங்கள் தெரியவரும் என சட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசின் விளையாட்டு செய்திகள்

## மேசைப் பந்துப் பயிற்சிகளைப் பெற்றனர் ஆசிரியர்களும் மாணவர்களும்

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இருந்து மேசைப்பந்து வீரர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் 4 பாடசாலைகளைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கும் 10 ஆசிரியர்களுக்கும் இருநாள் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதற்கான நடவடிக்கைகளை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ச.விஜயநீதன் மேற்கொண்டார்.

திருகோணமல்ல புனித மரியாள் கல்லூரி உள்ளக அரங்கில் இப்பயிற்சிகள் 08.12.2012, மற்றும் 09.12.2012 ஆகிய தினங்களில் நடந்தேறியது.

மூன்று கட்டங்களாக நடத்தப்பட்ட இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு மேற்படி பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கடவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(கஜன்)

# 46 பதக்கங்களை வென்றது திருமலை

Japan Karatedo Itosu-kai Trinco Branch



இத்தோசுக்காய் தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் போட்டியில் திருக்கோணமலை மாவட்டப் இத்தோசுக்காய் வீரர்கள் 46 பதக்கங்களை பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

இச் சுற்றுப்போட்டிகளிள் 38 ஆண் வீரர்களும் 04 பெண் வீராங்கணைகளுமாக மொத்தம் 42 போட்டியாளர்களை இம்மாவட்டத்தின் இத்தோசுக்காய் பயிற்சி ஆசிரியர் சென்சேய் ஆர். சத்தியராஜ் பயிற்றுவித்துள்ளார்.

இச் சுற்றுப்போட்டிகள் ஆண் மற்றும் பெண் இருபாலாருக்குமான தனிப் போட்டியாகவும், குழுப் போட்டிகளாகவும் மொத்தம் நான்கு பிரிவுகளில் காட்டா மற்றும் குமித்தே வகைகளில் நடந்தேறியுள்ளன.

மொத்தமாக திருமலை மாவட்டத்தால் வேட்டையாடப்பட்ட பதக்கங்களாக 14 தங்கப் பதக்கங்களும் 17 வெள்ளிப் பதக்கங்களும் 14 வெண்கலப்பதக்கங்களும் வெற்றி கொள்ளப்பட்டுள்ளன. காட்டா பிரிவில் மொத்தமாகப் 15 பதக்கங்களும் குமித்தே பிரிவில் மொத்தமாக 31 பதக்கங்களும் வெல்லப்பட்டுள்ளன.

# யங் எனிமீஸ் கழகத்தின் ஆண்டிறுதிக் கொண்டாட்டத் துடுப்பு மட்டைப் போட்டிகள்

(இர்சாத்)

வருட இறுதி கொண்டாட்டத்தை முன்னிட்டு யங் எனிமீஸ் கழக நிர்வாகத் தலைவர் பிரேமேந்திரனின் ஏற்பாட்டில் கழக உறுப்பினர்களிடையே யங் எனிமீஸ் எ, யங் எனிமீஸ் பி, யங் எனிமீஸ் சி, யங் எனிமீஸ் டி, என நான்கு அணிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அணியும் மற்றைய அணிகளோடு தலா இரண்டு முறை மோதிய துடுப்பு மட்டைப் போட்டிகள் நடந்தேறின. இறுதி போட்டிக்கு புள்ளிகள் அடிப்படையில் யங் எனிமீஸ் சி, யங் எனிமிக்ஸ் டி, ஆகிய இரு அணிகளும் தெரிவானது.

இறுதி போட்டி 10.12.2012 அன்று யங் எனிமீஸ் மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யங் எனிமீஸ் டி அணியின் தலைவர் ரூபன் முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார். அதற்கிணங்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரூபன் மற்றும் நேசதர்சன் களம் புகுந்தனர். மூன்றாவது பந்து பரிமாற்றத்தில் அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கை 18 ஆக இருந்த போது மூன்று ஓட்டங்களை பெற்றிருந்த ரூபன் பகுதி நேர பந்துவீச்சாளர் சுபாஸனால் வெளியேற்றப்பட்டார். ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சரிந்து கொண்டிருக்க நான்காவது துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய வி.தனுசாந்த் மறுமுனையில் தனது நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி கொண்டிருந்தார் அவர் 21 பந்துகளில் மூன்று ஆறு ஓட்டம் மற்றும் இரண்டு நான்கு ஓட்டம் அடங்கலாக 36 ஓட்டங்களை தன் அணிக்காக பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் யங் எனிமீஸ் சி அணி சார்பாக தர்சன் நான்கு விக்கெட்டுகளையும் கிரிசாந் மூன்று விக்கெட்டுகளையும் பகுதி நேர பந்து வீச்சாளர் சுபாஸன் இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தி இருந்தார்கள்.

58 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட மைதானம் புகுந்த யங்எனிமீஸ் சி அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. இவ்வணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சுபாஸன் போட்டியின் முதலாவது பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்து வீச்சிலே ஓட்டமேதும் பெறாத நிலையில் தனது விக்கெட்டை இழந்தார். தொடர்ந்து சிறப்பாக பந்து விசிய யங் எனிமீஸ் டி அணியின் பந்து வீச்சாளர்கள் எதிர் அணிக்கு சிம்மசொப்பனமாகவே விளங்கினர். விக்கெட் சரிவிலிருந்து மீள முடியாத யங் எனிமீஸ் சி அணியினர் இறுதி பந்து பரிமாற்றத்தில் மூன்று பந்துகள் மீதம் இருக்க 47 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து 10 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இவ்வணி சார்பாக அதிகபட்ச ஓட்டமாக 18 ஓட்டங்களை நித்தி பெற்றுக்கொடுத்திருந்தார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக சகலதுறையிலும் ஆட்டத்திறமையை வெளிப்படுத்திய யங் எனிமீஸ் டி அணியின் வீரர் வி.தனுசாந்த் தெரிவு செய்யப்பட்டார். இத்தொடரின் தொடர் ஆட்ட நாயகன் விருதை யங் எனிமீஸ் சி அணியின் நட்ச்சத்திர துடுப்பாட்ட வீரர் சுபாஸன் தட்டி சென்றார்.

புகைப்படங்கள் ▷



வெற்றிக் கிண்ணத்துடன் யங் எனிமீஸ் டி அணி

சிறப்பாட்ட நாயகன்

தொடராட்ட நாயகன்


## காணி வீடு விற்பனைக்குண்டு

திருகோணமலையில் 60 பேர்ச், 100 பேர்ச் காணிகள் விற்பனைக்கு உண்டு. 6 அறைகள் கட்டப்பட்ட நிலையில் வீடு ஒன்றும் உண்டு. உல்லாசப் பிரயாணத்துறைக்கு ஏற்ற இடம். தொடர்பு: 0729429060


## ஈச்சந்தீவு விபுலானந்தா வெற்றி

திருமலை ஈச்சந்தீவு விபுலானந்தா வித்தியாலயம் வலயமட்ட தோட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றி யீட்டியுள்ளது

## திருமலை ஸ்ரீவாணி வித்தியாலய மாணவர்கள் சாதனை

செல்வன் ப.தனுராஜ் செல்வன் ம. மதுசன் ஆகிய மாணவர்கள் புத்தாக்கக் கண்காட்சியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளார்கள்.





# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
25 . 05 . 1950

மறைவு
12 . 12 . 2012

அமரர். அருணாசலம் அருணகுமார்
(ஓய்வு பெற்ற உப அதிபர் தி/இ.கி.ச.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி)


மலைமுரசு பத்திரிகையின் அலுவலக விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trinco Town

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... அமைந்துள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 16 12. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org